பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 தை 17 புதன்கிழமை (30-01-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:66

## புலிகள் மீதான தடைநீக்க விடயம் சட்டமா அதிபரின் பரிசீலனைக்கு!

கொழும்பு,ஜன.30

விடுதலைப் புலிகள் அமைப்பு மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவது தொடர்பான விவகாரம் சட்டமா அதிபரின் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

புலிகள் மீதான தடையை முற்றாக நீக்குவதா அல்லது சில நிபந்தனைகளுடன் தடையைத் தளர்த்துவதா, புலிகள் சுதந்திரமாகப் பேச்சில் பங்குபற்ற வசதியாக தடையில் சில மாற்று ஏற்பாடுகளைச் செய்வதா என்பன குறித்து அரசு விரிவாக ஆராய்ந்து வருகின்றது.

தடைநீக்கம் தொடர்பான சட்ட நுணுக்கங்களை, ஆலோசனைகளைப் பெற வசதியாக சட்ட மா அதிபரின் பரிசீலனைக்கு இந்த விவகாரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் புலிகள் அமைப்பு தடை செய்யபட்டுள்ளதால் தடையை நீக்கக் கூடிய வகையில் அந்தச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவருவது குறித்தும் ஆராயப்பட்டுவருகின்றது.

இதேவேளை -

புலிகளின் தடைநீக்கம் தொடர்பாக மகாநாயக்கர்களின் கருத்தை அறியும் நோக்குடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழு ஒன்று அவர்களைச் சந்தித்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-3)

## தடைகளை நீக்கக் கோரி செயலக வளவில் இன்று தொடக்கம் மீனவர்கள் மறியல்!

யாழ்ப்பாணம்,ஜன.30

கடலில் இறங்கி சுதந்திரமாகத் தொழிலில் ஈடுபட விதிக்கப்பட்டிருக்கும் தடைகள், கட்டுப்பாடுகளை அகற்றுமாறு கோரி யாழ்.கடற்றொழிலாளர் சமூகம் இன்றுமுதல் சாத்வீக முறையிலான பெரும் மறியல் போராட்டத்தை ஆரம்பிக்கின்றது.

யாழ்.செயலக வளவில் இன்று காலை ஆரம்பமாகும் மறியற்போர் - அரசிடமிருந்து சாதகமான பதில்

(12ஆம் பக்கம் பார்க்க)

# விளக்குவைத்தகுளம் பகுதி ஊடாக கண்டி வீதி பெப்ரவரி 15 இல் திறப்பு!

## நாரந்தனை தாக்குதல் சம்பவம்: நெப்போலியன் பிரசன்னமாகாத நிலையில் வழக்கு விசாரணை நேற்று ஆரம்பமானது

யாழ்ப்பாணம்,ஜன.30

கடந்த நவம்பர் மாதம் 28ஆம் திகதி தேர்தல் பிரசாரத்துக்காகத் தீவுப்பகுதிக்குச் சென்ற தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்புப் பிரமுகர்கள் மீது நாரந்தனையில் வைத்து நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதல் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை முதலாவது எதிரியான நெப்போலியன் (செபஸ்ரியன் ரமேஸ்) பிரசன்னமாகாத நிலையில் நேற்று யாழ். நீதிமன்றத்தில் ஆரம்பமாகியது.

'சுருக்க முறையற்ற விசாரணை' (Non Summary Inquary) என்ற அடிப்படையில் இந்த விசாரணைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன.

கூட்டமைப்பு ஆதரவாளர்கள் இருவரைக் கொலை செய்தமை, பல உறுப்பினர்களைத் தாக்கிக் காயப்படுத்தியமை உட்பட 29 குற்றச்சாட்டுக்களின் பேரில் ஈ.பி.டி.பியின் இராணுவப் பொறுப்பாளர் நெப்போலியன், ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் என்.மதனராஜன், அக்கட்சியின் உறுப்பினர் ஜீவன் ஆகியோருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் முதலாவது எதிரியான நெப்போலியன் இன்னமும் கைது செய்யப்படவில்லை என்று ஊர்காவற்றுறைப் பொலீஸார் நீதிவானிடம் தெரிவித்தனர்.

எனினும் வழக்கு விசாரணையை முதலாவது எதிரியான நெப்போலியன் இன்றியே நடத்துவதென நீதிமன்றம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சோதனை முகாமைச் சுற்றி தற்காலிக பாதை அமைப்பு

வவுனியா,ஜனவரி30

**வன்னியில் இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசத்துக்கு கண்டி வீதி ஊடான தரைவழிப்பாதை வவுனியாவுக்கு வடக்கே விளக்குவைத்தகுளம் பகுதியில் திறக்கப்படவுள்ளது.**

**பெப்ரவரி 15 ஆம் திகதிமுதல் இந்தப் பாதை ஊடாக இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிக்கான போக்குவரத்து ஆரம்பமாகும்.**

கண்டி வீதியைத் திறப்பதற்கான ஏற்பாடுகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன.

வவுனியாவில் இருந்து வடக்கே கண்டி வீதியில் - விளக்குவைத்தகுளம் பகுதியில் - பிரதான சோதனைத் தடைமுகாம் இயங்கும். அங்கு சோத

(12ஆம் பக்கம் பார்க்க)



பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் அமைச்சர் மிலிந்த மொறகொட கடந்தவாரம் பிரமணாளங்குளம் பகுதியில் உள்ள படையினரின் முன்னரங்க நிலைகளை படை அதிகாரிகளுடன் சென்று பார்வையிட்ட சமயம் எடுக்கப்பட்ட படம். (படம்:தமிழ்நெற்)

## புல்மோட்டைக் கடலில் மீனவர் மீது தாக்குதல்!

கொழும்பு,ஜன.30

புல்மோட்டைக் கடற்பரப்பில் மீன் பிடித்துக்கொண்டிருந்த நான்கு மீனவர்களை சிறிலங்கா கடற்படையினர் தாக்கியுள்ளனர். மீனவர்கள் வைத்திருந்த மீன் வகைகளையும் அபகரித்துச் சென்றனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணியளவில் புல்மோட்டை அகதிமுகாமில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களே கடற்படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டிருக்கின்றனர்.

சிறிய வள்ளங்களில் தொழிலுக்குச் சென்ற இந்த மீனவர்கள் தூண்டில் போட்டு மீன் பிடித்துக்கொண்டிருந்த சமயம் இரு பீரங்கிப் படகுகளில் வந்த கடற்படையினர் மீனவரிடம் இருந்த மீன்களையும், தூண்டில்களையும் பறிமுதல் செய்துவிட்டு மீனவர்களைக் கடுமையாகத் தாக்கிவிட்டு அவர்களை கடலுக்குள் குதிக்குமாறும் வற்புறுத்தியதாகவும் கூறப்படுகின்றது.

ஒருவாறு கடற்படையினரிடம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஆயிரம் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு

கொழும்பு,ஜன.30

சுதந்திர தினத்தை முன்னிட்டு, சிறிய குற்றங்களுக்காக சிறைகளில தடுத்துவைக்கப்பட்டுள்ள சுமார் ஆயிரம் பேரை பொதுமன்னிப்பு வழங்கி விடுவிக்க அரசு தீர்மானித்துள்ளது.

இவ்வாறு விடுதலை செய்யப்படவுள்ள கைதிகளில் தமிழ் அரசியல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியினர் நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஜன.30

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு எதிராக தென் பகுதி நகரங்களில் ஜே.வி.பி. நேற்று ஆர்ப்பாட்டங்களை நடத்தியது. எனினும் இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு மக்கள் மத்தியில் பெருவரவேற்பு இருக்கவில்லை என்றும் மிகக் குறைந்த எண்ணிக்கையானவர்களே அவற்றில் கலந்துகொண்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் தெகிவளை, மகரகம ஆகிய இடங்களில் இந்த ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

அரசின் சமாதான முயற்சி, புலிகள் மீதான தடை நீக்கம் ஆகியவற்றுக்கு எதிரான சுலோகங்கள் அடங்கிய அட்டைகளை ஆர்ப்பாட்டக்காரர் தாங்கியிருந்தனர். (ஐ-3-173)

## வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சி தேர்தலை ஒத்திவைப்பதை ஜே.வி.பி. கண்டிக்கிறது

கொழும்பு,ஜன.30

வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்க அரசு எடுத்திருக்கும் முடிவை ஜே.வி.பி. கண்டித்திருக்கிறது.

இது தொடர்பாக ஜே.வி.பி. அமைப்பினால் வெளியிடப்பட்டிருக்கும் ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது தொடர்பாகத் தீர்மானம் எடுப்பவர்கள் விடுதலைப் புலிகளே. அவர்களை மீறித் தேர்தல் நடத்தக்கூடாது என்பதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலை ஒத்திவைக்குமாறு கோரிக்கையை விடுத்துள்ளது.

விடுதலைப் புலிகளின் இந்த அதிகார உரிமையை ஏற்றுக்கொண்ட ஐக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேக் குழுவுடனான பேச்சில் முன்னேற்றம்!

### நம்பிக்கை தருகிறது என்கிறார் பாலசிங்கம்

கொழும்பு,ஜன.30

நிரந்தரமான, நிலைத்துநிற்கக் கூடிய போர்நிறுத்தம் ஒன்றை நடைமுறைக்குக் கொண்டுவர நோர்வே நடவடிக்கை எடுத்துள்ளது. அது தொடர்பான பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அது நம்பிக்கை ஊட்டுவதாக அமைந்தது.

புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நோர்வே தூதுக்குழுவுடன் நேற்று முன்தினம் நடத்திய பேச்சுக்களை

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மீனவர்களின் போராட்டம் நீதியானது! நியாயமானது!!

## பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.30

சுதந்திரமாகத் தொழில் செய்ய அனுமதி மறுக்கப்பட்டுள்ள மீனவரின போராட்டம் நியாயமானது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

யாழ்செயலகம் முன் இன்று இடம்பெறவுள்ள மறியல் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு - கிழக்கில் தொடர்ந்து கொண்டிருக்கும் போரினால் கடந்த பன்னிரண்டு வருடங்களுக்கு மேலாக நடைமுறையில் இருந்துவரும் பயங்கரமாகத் தடைச்சட்டம், கடல்வலயத் தடைச்சட்டம் என்பவற்றினால் வடக்கு - கிழக்கில் தமிழ்மக்களின் பொருளாதாரம் முழுமையாகச் சீரழிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1995ஆம் ஆண்டு யாழ். குடாநாடு அரசபடைகளால் ஆக்கிரமிக்கப்பட்ட பின்னர் குடாநாட்டில் வாழும் லட்சத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் தொழிலுக்காக கடலில் கால் பதிக்க முடியாதளவுக்கு கடல்வலயத்தடை இறுக்கப்பட்டு இராணுவக் கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதனால் கடற்றொழில் செய்து வாழ்ந்து வந்த லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் தமது நாளாந்த வருமானத்தை இழந்து அகதிகளாக வாழ வேண்டியநிலை ஏற்பட்டது. நூற்றுக்கணக்கான - பாடசாலை செல்லும் வயதிலுள்ள பிள்ளைகள் - தமது கல்வி வாய்ப்பை இழந்து வீதிகளில் திரிகின்றனர்.

வருமானமின்மையால் குடும்பப் பிரிவுகள், தற்கொலைகள் என்பன அதிகரித்தன. பாதுகாப்பு, கடல்வலய தடை என்ற பெயரால் தொடரும் இம் மக்களின் அவலவாழ்விற்கு புதிய அரசின் ஆட்சியிலாவது விமோசனம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் புதிய அரசு பதவி ஏற்று இரண்டு மாதங்கள் பூர்த்தியாகவுள்ள நிலையிலும்கூட மீனவர்கள் சுதந்திரமாகத் தமது தொழிலை விரும்பிய நேரம், விரும்பிய தூரம் சென்று மீன்பிடிக்க அனுமதிக்கப்படாது ஏமாறப்பட்டே வருகின்றார்கள்.

குடாநாட்டில் பொருள்களின் விலையேற்றம் மக்களை வாட்டிவருகிறது. இந்நிலையில் கடற்தொழிற்சங்கத்தினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ள மறியல் போராட்டம் நியாயமானது. இப்போராட்டம் வெற்றியடையும் வரை எமது ஆதரவினை வழங்கத் தயாராகவுள்ளோம் - என்றுள்ளது. (ஐ-3)

# மோதல் தவிர்ப்பு நிலையிலும் மீன்பிடித் தடை எதற்காக?

யாழ்ப்பாணம்,ஜன.30

அரசும் விடுதலைப் புலிகளும் யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடித்து வருகின்ற வேளையில் மீன்பிடித் தடை இன்னும் தொடருவதற்கு எவ்வித நியாயமும் இல்லை.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ்.செயலகம் முன்பாக இன்று மீனவர்கள் நடத்தவுள்ள மறியல் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து அவர் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணத்திலுள்ள கடற்றொழிலாளர்கள் இன்று யாழ்.கச்சேரி முன்பாக மறியல் போராட்டம் ஒன்றை மேற்கொள்வதற்கு உத்தேசித்திருக்கிறார்கள். இந்த மறியல் போராட்டத்தை நானும் எனது கட்சியும் ஏனைய எனது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் மற்றும் தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆதரிக்கின்றோம். மீனவர்களின் கோரிக்கை நீதியானதும் நியாயமானதுமாகும்.

இது சம்பந்தமாகப் பிரதமருடன் பாதுகாப்பு அமைச்சருடனும் மற்றும் அமைச்சர்களான ஜீஎல்பீரிஸ், மிலிந்த மொறகொட ஆகியோருடன் தொடர்பு கொண்டு மகஜரும் அனுப்பியுள்ளேன்.

அரசினாலும் விடுதலைப் புலிகளினாலும் யுத்தநிறுத்தமும் மோதல் தவிர்ப்பும் கடைப்பிடிக்கப்படுகின்ற போதிலும்கூட மீன்பிடித் தடை இன்னும் தொடருவதற்கு எவ்வித நியாயமுமில்லை.

தொண்டமானாறு தொடக்கம் திக்கம் வரையிலான மீனவர்கள் முழுமையாக மீன்பிடிப்பதற்கு அனுமதியளிக்கப்படவில்லை. வடமாகாணத்திலிருக்கும் மீனவர்கள் அனைவரும் எவ்வித கட்டுப்பாடுகளும் தடையுமின்றி மீன்பிடிப்பதற்கு அனுமதிக்கப்படவேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது. (ஐ-3)

# புதிய அரசின் ஆட்சியிலும் மீனவருக்கு விடிவில்லை!

யாழ்ப்பாணம்,ஜன.30

புதிய அரசு பதவிக்கு வந்த பின்பும்கூட யாழ்மீனவர்களின் வாழ்வில் விடிவு ஏற்படவில்லை.

யாழ் செயலகம் முன்பாக இன்று முதல் நடத்தப்படவுள்ள அறவழி முறையிலான மறியல் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ்மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புக் காரணத்தை முன்வைத்து கடற்றொழிலாளர்களும், விவசாயிகளும் பல இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். கடுமையாக மட்டுப்படுத்தப்பட்ட மீன் பிடிக்கும் நேரம், தூரம், பாஸ், சிறு காரணங்களுக்காக மீன்பிடிக்கத் தடைவிதித்தல் போன்ற நடைமுறைகளால் கடற்றொழிலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். இதனால் வறுமையின் விளிம்பில் அவர்கள் வாழ வேண்டிய நிலை உள்ளது.

இறந்த நிவாரணம் வேண்டி பல தடவைகள் நடத்தப்பட்ட சாத்வீக ரீதியிலான போராட்டங்கள் நடத்தப்பட்ட போதிலும் அரச அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் இது குறித்து உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

- என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

## கௌரவிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜன.30

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் ஆசிரியர் சேவையில் வெள்ளிவிழாக் காணும் மூவர் இன்று கௌரவிக்கப்படவுள்ளனர்.

நலன்புரிச் சங்கத் தலைவர் டபிள்யூ. ஜெயசீலன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் அதிபர் க.இராசதுரை, உதவி அதிபர் திருமதி இ.பாலசுந்தரம்பிள்ளை, உதவி அதிபர் கு.சிவகுமாரன் ஆகியோரே கௌரவிக்கப்படவுள்ளனர். (ஐ-3)


## கைமாறிவிட்டது

26.01.2002 சனிக்கிழமை யாழ். ஸ்ரான்லி வீதியில் பெயின்ற் கடைக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆண்கள் 'லுமாலா' சைக்கிள் ஒன்றைத் தவறுதலாக மாற்றி எடுத்துச்சென்றவர்கள் தயவுசெய்து பின்வரும் விலாசத்தில் தொடர்புகொண்டு மாற்றி எடுத்துக்கொள்ளவும்.

'கீதாஸ்'
பெயின்ற் வகைகள் விற்பனையாளர்,
109, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (105)

## துயர் பகிர்கின்றோம்

சாவகச்சேரி மகா வித்தியாலய அதிபரும்
இணுவில் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபருமான
(பழைய மாணவரும்) க.கனகராசாவின் பாசமிகு தந்தையார்

### க.கந்தையா

அவர்கள் காலமானதையிட்டு நாம் ஆழ்ந்ததுயர் அடைவதுடன், அன்னாரின் இழப்பால் துன்புற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர்கள்,
யா/இணுவில் இந்துக் கல்லூரி.
(C/20541)

**ST.PATRICK'S COLLEGE OLD BOYS' ASSOCIATION**

## அஞ்சலி

எமது கல்லூரியின் முன்னாள் அதிபராகவும்,
பழைய மாணவர் சங்கத் தலைவராகவும் சேவையாற்றிய

**அருட்தந்தை ஜோண் A.பிரான்சிஸ் (O.M.I.)**

அடிகளார் இறைவனடி சேர்ந்ததையிட்டு
எமது அஞ்சலியை செலுத்துகின்றோம்.

அடிகளாரின் இறுதி அஞ்சலி நிகழ்வில் பங்குபற்றுவதன் பொருட்டு சங்க அங்கத்தவர்களை **இன்று** *(30.01.2002) பிற்பகல் 3.00 மணிக்கு* சங்கப் பணிமனையில் ஒன்றுகூடும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

கௌரவ பொதுச் செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்.
(C/20540)


# 300இற்கும் மேற்பட்ட ஆலயங்கள் சூரிய மின்கலம் மூலம் ஒளிபெறும்

## இந்து விவகார அமைச்சு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜன.30

நூறுநாள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்து கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் 300இற்கும் மேற்பட்ட ஆலயங்கள் ஒளிபெறவிருக்கின்றன.

இந்த அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி மூலம் இத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவிருக்கின்றன.

அமைச்சு மேற்கொள்ளவிருக்கும் திட்டங்கள் வருமாறு:-

- யாழ்.மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் உள்ள 15 ஆலயங்களுக்கு சூரிய சக்தி மின்கலம் மூலம் மின்வழங்கப்படும்.
- திருகோணமலை, வன்னி, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள 37 ஆலயங்களுக்கும் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் உள்ள 37 ஆலயங்களுக்கும் சூரியசக்தி மின்கலம்மூலம் மின் விநியோகம் மேற்கொள்ளப்படும்.
- கொழும்பு, பலாங்கொடை, பதுளை ஆகிய இடங்களில் உள்ள இந்து ஆலயங்களுக்கும் சூரியசக்தி மின்கலம் வழங்கப்படும்.
- யாழ்மாவட்டத்தில் உள்ள பெற்றோரை இழந்த சிறுவர் இல்லங்களுக்கு சூரியசக்தி மின்கலம் வழங்கப்படும்.
- இந்து ஆலயங்களுக்கு பட்டுக்குடை, நந்திக் கொடி, பஞ்சாராத்தி ஆகியன வழங்க 40 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.
- யாழ்.ஆஸ்பத்திரியில் அந்தணர்கள் தங்கிச் சிகிச்சை பெற தனியான வார்ட் அமைக்க 10 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

# மண்ணெண்ணெய் விநியோகம் இரு வாரங்களில் சீராகிவிடும்

## நீதிமன்றத்துக்கு அரச அதிபர் உறுதிமொழி

யாழ்ப்பாணம்,ஜன.30

குடாநாட்டில் மண்ணெண்ணெய்க்கு நிலவும் தட்டுப்பாடு இன்னும் இரு வாரங்களுக்குள் நீங்கிவிடும். அதன் பின் மண்ணெண்ணெய் தாராளமாக விநியோகிக்கப்படும்.

யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதன் மேற்கண்டவாறு உறுதி அளித்துள்ளார் என்று யாழ். நீதிவான் ஆர்.ரி. விக்னராஜா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கத்துக்கு விநியோகத்துக்குத் தேவையான 80 ஆயிரம் லீற்றரில் 19 ஆயிரத்து 800 லீற்றர் மண்ணெண்ணெய் மட்டுமே வழங்கப்பட்டதாகவும் -

நல்லூர் ப.நோ.கூ.சங்கத்துக்கு விநியோகத்துக்குத் தேவையான 44 ஆயிரம் லீற்றரில் 19 ஆயிரத்து 800 லீற்றர் மட்டுமே வழங்கப்பட்டதாகவும் -

வடமராட்சி மக்களின் விநியோகத்துக்கு அங்கீகரிக்கப்பட்ட முகவர் எவரும் நியமிக்கப்படவில்லை என்றும் -

நீதிமன்றத்துக்கு முறைப்பாடுகள் கிடைத்திருந்தன.

இந்த முறைப்பாடுகள் குறித்த விவகாரம் யாழ்நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன் நேற்று எடுக்கப்பட்டது.

இரு வாரங்களுக்குள் மண்ணெண்ணெய் விநியோகம் தாராளமாக்கப்படும் என்றும் -

வடமராட்சியில் அங்கீகரிக்கப்பட்ட முகவர் ஒருவர் மூலம் இன்றுமுதல் விநியோகம் மேற்கொள்ளப்படும் என்றும் -

அரச அதிபர் உறுதியளித்துள்ளதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

தாராள விநியோகம் இடம்பெறும் போதும் விலைக்கட்டுப்பாட்டைக் கண்டிப்பாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதேவேளை -

எரிபொருள்களுடன் ஒரு கப்பல் காங்கேசன்துறைக்கு வந்துள்ளதாகவும் - மற்றுமொரு கப்பல் ஓரிரு தினங்களில் காங்கேசன்துறைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-3)

## மாணவியின் வயிற்றில் ஈட்டி பாய்ந்தது!

யாழ்ப்பாணம்,ஜன.30

விளையாட்டுப் போட்டிக்கான பயிற்சியில் ஈடுபட்ட மாணவர்கள் எறிந்த ஈட்டி குத்தி மாணவி ஒருத்தியின் வயிற்றில் பாய்ந்தது. இதனால் அந்த மாணவி படுகாயமடைந்தாள்.

இந்தச் சம்பவம் நேற்றுக்காலை மருதனார்மடத்தில் இயங்கும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. கல்லூரியின் மாணவியான முருகையா வத்சலா (வயது 11 - கட்டுவன்) என்பவரே இடதுபக்க விலாவில் ஈட்டி குத்தியதில் படுகாயமடைந்தார்.

யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர் அவசர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

(ஐ-7-6-15-139)


## ஸ்ரீவல்லிபுரா போட்டோ

★ எதிர்வரும் 01.02.2002 அன்று இங்கிருந்து கொழும்புக்கு புகைப்படச் சுருள்களும், வீடியோ கசற்றும் அனுப்பிவைக்கப்படும்.

புலோலி 070-212720 (108) நல்லூர் 021-2604

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

தற்போது கைதடி அரசினர் மத்திய மருந்தகத்தின் பொறுப்பதிகாரியாகக் கடமைபுரியும் வைத்திய கலாநிதி **திரு.பொ.சண்முகரத்தினம் (புலவர்)** 2002.01.09ஆம் திகதிமுதல் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக பதவியேற்றிருக்கும் அவர்களை வரவேற்று அவர் பணிசிறக்க பாராட்டி வாழ்த்துகின்றோம்.

உறவினர், நண்பர்கள். (103)

## வெள்ளிவிழா நாயகர்களை வாழ்த்துகின்றோம்

*எமது கல்லூரியின்*

**அதிபர் திரு.க.இராசதுரை**

**உதவி அதிபர் திருமதி.இ.பாலசுந்தரம்பிள்ளை**

**உதவி அதிபர் திரு.கு.சிவகுமாரன்**

*ஆகியோர் தமது கல்விச் சேவையில் 25 வருடங்களைப் பூர்த்தி செய்ததையிட்டு அவர்களை மனதார வாழ்த்துகின்றோம்.*

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யாழ்.மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்.
(098)

### ஆண்டிப்பட்டி இடைத் தேர்தல்:

# தி.மு.கவின் வழக்கை எதிர்த்து ஜெயலலிதா மனுத்தாக்கல்

புதுடில்லி,ஜன.30

ஆண்டிப்பட்டித் தொகுதி இடைத் தேர்தலை ஒத்திவைக்கக் கோரி இந்திய உச்ச நீதிமன்றத்தில் தி.மு.க. வேட்பாளரான வைகை சேகர் தொடர்ந்துள்ள வழக்கை எதிர்த்து அ.தி.மு.க. வேட்பாளரான ஜெயலலிதா நேற்றுமுன்தினம் அதே நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.



ஆண்டிப்பட்டித் தொகுதியில் வாக்காளர் பட்டியல் தயாரிப்பதில் முறைகேடு நடந்துள்ளதால் அங்கு நடைபெறவுள்ள இடைத் தேர்தலை ஒத்திவைக்க வேண்டும் என்று கோரி வைகை சேகர் கடந்த வாரம் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

இந்த வழக்கை எதிர்த்து நேற்று முன்தினம் ஜெயலலிதா சார்பில் அவருடைய சட்டத்தரணிகள் கே.கே. வேணுகோபாலும், ஜோதியும் மனுத் தாக்கல் செய்தனர்.

அரசியல் சட்டம் 309ஆவது பிரிவின்படி, தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பிறகு தேர்தலை நிறுத்தும்படி வழக்குத் தொடர முடியாது எனறும் -

ஆண்டிப்பட்டித் தொகுதியில் மொத்தம் 24பேர் போட்டியிடுவதால் அங்கு போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் தொடர்ந்துள்ள வழக்கை மட்டும் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்றும் -

அதே தொகுதியில் போட்டியிடும தன்னுடைய மனுவையும் நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் -

அம்மனுவில் ஜெயலலிதா கூறியுள்ளார். (ஒ)

## ரயில் விபத்தில் இருவர் பலி!

கௌகாத்தி,ஜன.30

இந்தியாவின் அஸாம் மாநிலம் கௌகாத்தி அருகே காமத்தியா ரயில் நிலையத்தில் நேற்று நின்று கொண்டிருந்த 'கன்ஞன் ஜங்கா' விரைவு ரயில் மீது சரக்கு ரயிலொன்று மோதியதில் இருவர் உயிரிழந்தனர்.

கடந்த சில மாதங்களில் இதே ரயில் நிலையத்தில் தவறான சமிக்ஞைகளால் நிகழ்ந்த மூன்றாவது விபத்து இது என்று கூறப்படுகிறது. (ஒ)

# ஆப்கானிஸ்தான் மருத்துவமனையில் 6 அல்கெய்டாவினர் சுட்டுக்கொலை!

காபூல்,ஜன.30

ஆப்கானிஸ்தானில் மருத்துவமனை ஒன்றில் தங்கியிருந்த அல்கெய்டா அமைப்பைச் சேர்ந்த 6 அரபுக்கள் அங்கு இடம்பெற்ற மோதலில் சுட்டுக்கொல்லப்பட்டதாக ஆப்கான் பொலீஸார் அறிவித்தனர்.

கந்தகாரை தலிபான்கள் கைவிட்டுப்போனபோது இந்த 6 பேரும் மிர்வாயிஸ் மருத்துவமனையில் போர்க்காயங்களுக்காகச் சிகிச்சை பெற்று வந்தனர். பின்னர் மருத்துவமனையின் இரண்டாவது மாடிப்பகுதியை தடுப்பரணாக உபயோகித்துக்கொண்டு அவர்கள் அங்கேயே தங்கியிருந்தனர்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் அதிகாலையில் உள்ளூர் நேரப்படி 3.40 மணியளவில் மருத்துவமனைக்குள் புகுந்த அமெரிக்க மற்றும் ஆப்கான் படையினர் அந்த ஆறுபேரையும் சுட்டுக்கொன்றதாகக் கூறப்படுகிறது.

படையினர் உள்ளே நுழைந்த சமயம் பலத்த வெடியோசைகளும், துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும் மருத்துவமனையை அதிரவைத்ததாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். இராணுவ நடவடிக்கை தொடங்கப்பட்ட கடைசி நிமிடம் வரை அல்கெய்டாவினரை சரணடையும்படி கூறியதாகவும் -



கொல்லப்பட்ட போராளியின் சடலம்.

ஆனால் அதனைச் செவிமடுக்காது அவர்கள் கிரனேட் மற்றும் துப்பாக்கிகளைப் பயன்படுத்தி தாக்கத் தொடங்கியதாகவும் -

அமெரிக்கப் படையின் மேஜர் கிரிஸ் மில்லர் தெரிவித்தார்.

ஆப்கான் படையினர் மேற்கொண்ட இந்த நடவடிக்கையில் அமெரிக்கப் படையினர் ஆலோசகர்களாக மட்டுமே செயற்பட்டதாகவும் அவர் கூறினார்.

ஆனால் நேரில் கண்டவர்கள் கூறுகையில் மருத்துவமனைச் சுவர்களில் சத்தமின்றி ஏறிய அமெரிக்கப் படையினர் இரண்டாவது மாடிக்குள் கிரனேட்டுக்களை வீசி சுடத் தொடங்கியதாகத் தெரிவித்தனர்.

கடந்த ஆண்டு டிசெம்பர் 7 ஆம் திகதி கந்தகார் தலிபான் எதிர்ப்புப் படைகள் வசம் வந்தபோது அல்கெய்டா அமைப்பைச் சேர்ந்த 19 பேர் இந்த மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றதாகக் கூறப்படுகிறது. அவர்களில் சிறு காயங்களுடன் இருந்தவர்கள் தப்பிச் சென்ற பின்னர் இந்த 6 பேர் மட்டும் அங்கு தங்கியிருந்தனர். (ஒ)

# கொலம்பிய எல்லைப் புறத்தில் விமானம் விழுந்து நொறுங்கியது!

## அதிலிருந்த அனைவரும் பலியென அச்சம்

குயிட்டோ,ஜன.30

கொலம்பிய எல்லையில் மலைப் பகுதி மீது ஈக்குவடோர் விமான சேவை நிறுவனத்தின் பயணிகள் விமானம் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் அதிலிருந்து 92 பேரும் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

ஈக்குவடோரின் தலைநகர் குயிட்டோவில் இருந்து 83 பயணிகள், 9 விமானப் பணியாளர்கள் ஆகியோருடன் வடக்கு எல்லை நகரான டல்கனுக்கு நேற்றுமுன்தினம் காலை புறப்பட்டுச் சென்ற பயணிகள் விமானமே விபத்துக்குள்ளானது. டல்கனிலிருந்து சுமார் 135 கிலோ மீற்றர்கள் தொலைவில் பறந்து கொண்டிருந்த சமயத்தில் விமானத்துடனான தொடர்பு துண்டிக்கப்பட்டது.

அப்பகுதியில் தொடர்ந்து பல நாள்களாக அடர்த்தியான பனி மூட்டம் இருப்பதாகவும் -

விமானம் விபத்துக்குள்ளாகியதற்கு அதுவே காரணமாக இருக்கக்கூடும் என்றும் -

கொலம்பியா விமானப் போக்குவரத்துக் கழகம் தெரிவித்தது.

விமானம் மோதி நொறுங்கியதாகக் கருதப்படும் இடத்தில் இப்போதும் மிகமோசமான பனிமூட்டம் உள்ளதால் மீட்புப் பணியாளர்கள் விபத்துக்குள்ளான விமானத்தை நேற்று மாலை வரை கண்டுபிடிக்க முடியாதிருந்தது.

விபத்து நடந்ததாகக் கூறப்படும் இடத்தில் வசிக்கும் விவசாயி ஆர்டு ரோகுரூஸ் கொலம்பியன் வானொலிக்கு தெரிவிக்கையில் -

4 ஆயிரத்து 700 மீற்றர்கள் உயரம் உடைய எல்காம்பல் எரிமலை மீது விமானம் மோதியிருக்கும் என்று தான் நம்புவதாகவும் -

விமானத்தை அப்பகுதியில் பார்த்த சில விநாடிகளில் பெரும் ஓசையைக் கேட்டதாகவும் -



விமானப் பயணி ஒருவரின் உறவினர் சோகத்தில்......

கூறியுள்ளார்.

கொலம்பியா மற்றும் ஈக்குவடோர் ஆகிய நாடுகள் இணைந்து தேடுதல் பணிகளில் ஈடுபட்டுள்ளன.(ஒ)

# ஆப்கானில் ஹெலி விபத்து; 14 அமெரிக்கர்கள் காயம்!

காபூல்,ஜன.30

கிழக்கு ஆப்கான் பிரதேசத்தில் அமெரிக்க இராணுவ ஹெலிகொப்டர் ஒன்று விழுந்து விபத்துக்குள்ளாகியது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த விபத்தில் ஹெலியில் இருந்த 24 பேரும் உயிர் தப்பிவிட்டனர். அவர்களில் 14 பேர் காயமடைந்துள்ளனர்.

கிழக்கு ஆப்கான் நகரான கூஸ்ட்டில் தரையிறங்க முற்பட்ட வேளையில் வேகமாக நிலத்தில் மோதியதாலேயே விபத்து ஏற்பட்டதாக அமெரிக்கப் படையின் கேணல் பிராங் வயர்சினாங்கி தெரிவித்தார்.

இதேவேளை -

தலிபான் அல்லது அல்கெய்டா போராளிகள் மறைந்திருந்து மேற்கொண்ட தாக்குதலால் ஹெலி தடுமாறித் தரையிறங்கியதாலேயே இந்த விபத்து நிகழ்ந்ததாகவும் -

இந்தக் ஹெலியில் பயணம் செய்த அமெரிக்கப் படையினர் நால்வர் பலத்த காயங்களுக்குள்ளானதாகவும் -

சுயாதீனச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஒ)

# 'வூமரா' முகாமை மூடிவிட ஆஸ்திரேலிய அரசு முடிவு

வூமேரா,ஜன.30

ஆஸ்திரேலியாவில் அகதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள 'வூமரா' தடுப்பு முகாமை மூடிவிட அந்த நாட்டு அரசு தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

தமக்கு குடியுரிமை அல்லது 'விசா' வழங்கும்படி கோரி 'வூமரா' தடுப்பு முகாமில் உள்ள சுமார் 200 சட்டவிரோதக் குடியேறிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களில் 11 இளைஞர்கள் தமது கோரிக்கைகளை ஆஸ்திரேலிய அரசு நிறைவேற்றாதுவிட்டால் தற்கொலை செய்யப்போவதாக மிரட்டிவருகின்றனர்.

இது தொடர்பாக அரசுக்கு ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்ட குழு 'வூமரா' முகாமுக்குச் சென்று நிலைமையை அவதானித்த பின்னர் அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

'வூமரா' முகாமில் அளவுக்கு அதிகமான எண்ணிக்கையில், வசதிக்குறைவான சூழ்நிலையில் சட்டவிரோதக் குடியேறிகள் தங்க வைக்கப்பட்டிருப்பதாகவும் -

பாலைவனப் பகுதியில் உள்ள 'வூமரா' முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களை முன்னேறிய பகுதிகளுக்கு மாற்றும்படியும் -

அந்த அறிக்கையில் யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்தே 'வூமரா' முகாமை மூடிவிட ஆஸ்திரேலிய அரசு முடிவு செய்துள்ளது. (ஒ)

# கத்தோலிக்க சட்டத்தரணிகள் விவாகரத்துக்கு உதவக்கூடாது

## பாப்பரசர் வேண்டுகோள்



வத்திக்கான்,ஜன.30

கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த சட்டத்தரணிகள் விவாகரத்து வழக்குகளைக் கையாளக்கூடாது. அதேபோன்று கத்தோலிக்க நீதிபதிகள் விவாகரத்து வழங்குவதைக் கைவிடவேண்டும்.

இவ்வாறு பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் கேட்டுக்கொண்டார். வத்திக்கான் நீதிபதிகளுடனான தனது வருடாந்த சந்திப்பிலேயே பாப்பரசர் இந்த வேண்டுகோளைவிடுத்தார்.

சமூகத்தில் விவாகரத்து கொள்ளை நோய போல் பரவிவருகிறது. அதற்கு துணை போவதன் மூலம் சட்டத்தரணிகள் சாத்தானின் ஊழியர்களாகி விடக்கூடாது.

திருமணம் என்பது பிரிக்க முடியாத ஒரு பந்தம். மனிதன் உருவாக்கிய சட்டங்களில் விவாகரத்துக்கு இடமுண்டு என்று வாதிடக்கூடாது. இயற்கை மற்றும் இறைவனின் சட்டங்கள் திருமணத்தைப் பாதுகாக்கின்றன. கத்தோலிக்கர்கள் அல்லாதோர் விவாகரத்துப் பெறக்கூட கத்தோலிக்க சட்டத்தரணிகள் உதவக்கூடாது.

நீதிபதிகள் தம்மிடம்வரும் வழக்குகளை விசாரிப்பதை தவிர்க்க முடியாது. ஆனால் விவாகரத்து வழங்குவதை தவிர்த்து தனிப்பட்ட முறையில் தம்பதியரிடம் பேசி அவர்களை சேர்த்துவைக்க நீதிபதிகளால் முடியும்.

இவ்வாறு பாப்பரசர் தெரிவித்தார். (ஒ)

# குவாண்டனாமாவுக்கு கைதிகளை கொண்டுசெல்வது இடைநிறுத்தம்!

## அமெரிக்கா அறிவிப்பு

லண்டன்,ஜன.30

ஆப்கானிஸ்தானில் பிடிபட்ட கைதிகளை கியூபாவில் உள்ள தனது குவாண்டனாமா தளத்துக்குக் கொண்டுசென்று சிறைவைக்கும நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக அமெரிக்கா அறிவிதத்துள்ளது.

குவாண்டனாமாவில் கைதிகளைத தடுத்துவைப்பதற்கான வசதிகளை மேம்படுத்துவதற்காகவே கைதிகளைக் கொண்டுசெல்வது இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஆயினும் குவாண்டனாமாவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகள் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படுவதாகவும் -

ஆப்கானில் பிடிபட்ட கைதிகள் தொடர்பாக ஜெனீவா ஒப்பந்தம் மற்றும் அமெரிக்கச் சட்டங்களைப் புறக்கணித்து மனித உரிமைமீறல்களில் அமெரிக்கா ஈடுபடுவதாகவும் -

சர்வதேச சமூகம் மற்றும் பொது அமைப்புகள் கடும் கண்டனங்களை வெளியிட்டு வருகின்றன. இவற்றைச் சமாளிக்கவே அமெரிக்கா இவ்வாறு அறிவித்துள்ளதாகக் கருதப்படுகிறது.

ஆப்கானிஸ்தானில் பிடிபட்ட தலிபான் மற்றும் அல்கெய்டா அமைப்பினரில் 110பேர் கியூபாவில் உள்ள அமெரிக்கக் கடற்படைத் தளமான குவாண்டனாமாவில் சங்கிலியால் பிணைக்கப்பட்டு, கண்கள் கட்டப்பட்ட நிலையில் சிறிய கூண்டுகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதனை மனிதாபிமானமற்ற செயல் என்று அமெரிக்காவிலும் எதிர்ப்புக் குரல்கள் எழத்தொடங்கியுள்ளதும் அமெரிக்காவின் முடிவுக்குக் காரணம என்று கூறப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாக மனித உரிமை ஆர்வலர்கள் குழு அமெரிக்க நீதிமன்றம் ஒன்றில் வழக்குத் தொடர்ந்துள்ளது.

இதேவேளை, ஆப்கான் கைதிகள் தொடர்பான நீதியான நடைமுறை ஒன்று வரையறுக்கப்பட்டாலே தவிர இந்த விவகாரத்தில் அமெரிக்காவின் தற்போதைய இடைநிறுத்த அறிவிப்பு பயனற்றது என்று மனித உரிமை ஆர்வலர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ஒ)

### உலக அரங்கில்

## ஆப்கானிஸ்தானின் முன்னாள் மன்னர் மார்ச்சில் நாடு திரும்புவார்

லண்டன்,ஜன.30

ஆப்கானிஸ்தானின் முன்னாள் மன்னர் ஷகிர்ஷா எதிர்வரும் மார்ச்மாத நடுப்பகுதியில் மீண்டும் ஆப்கானிஸ்தானுக்குத் திரும்பவுள்ளதாக அவரது மகன் தெரிவித்துள்ளார்.

லண்டனில் வசிக்கும் ஷகிர்ஷா 28 ஆண்டுகளின் பின்னர் தனது சொந்த நாட்டுக்குத் திரும்பவுள்ளார என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# மீனவர்களின் போராட்டத்திற்கு அனைவரும் ஆதரவு தாருங்கள்!

## கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.30

மீனவர் சங்கங்கள் இணைந்து யாழ்.செயலகம் முன்பாக இன்று நடத்தவுள்ள மறியற்போராட்டத்திற்கு பொது அமைப்புகளையும், பொது மக்களையும் ஆதரவுதருமாறு வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கோரியுள்ளது.

இது தொடர்பாக சமாசம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த பல வருடங்களாக எமது கடற்றொழிலாளர்கள் அனுபவித்து வரும் அவலங்கள் சொல்லில் அடங்கா! இந்த அவலங்களில் இருந்து எமது மக்களை விடுவிப்பதற்கான பல போராட்டங்களை சாத்வீகமான முறையில் நடத்தி வந்தோம். எமது தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட குறைபாடுகளை விரிவாகவும், மிகவும் துலக்கமாகவும் சுட்டிக்காட்டி அமைச்சர்களுக்கும், அமைச்சின் செயலாளர்களுக்கும், அதிகாரிகளுக்கும் மகஜர்களை அனுப்பி வைத்தோம். இந்த நடவடிக்கையினால் எள்ளளவும் பயனேதும் ஏற்படவில்லை. ஏற்படக்கூடிய சாத்தியம் கூடத் தென்படவில்லை.

என்றாலும் புதிய அரசு ஆட்சி அமைத்தால் எமக்கெல்லாம் விமோசனம் கிடைக்கும் என எண்ணிக் காத்திருந்தோம். புதிய அரசும் ஆட்சிக் கட்டில் ஏறியது. அது ஆட்சி அமைத்து ஐம்பது நாள்களாகி விட்டன. ஆனால் எமது பிரச்சினை தீர்வதற்கு வாய்ப்பு இதுவரை தெரியவில்லை. புதிய அரசின் பிரதமர் கடற்றொழில் அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, புனர்வாழ்வு அகதிகள் அமைச்சு, அமைச்சுக்களின் செயலாளர்கள் அனைவருக்கும் எமது தொழிலாளர்களின் பிரச்சினைகள் குறித்து கடிதம் அனுப்பிவைத்தோம். ஆனால் சரியான பதில் இல்லை.

அது மட்டுமல்ல இந்துகலாசார அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்தும், எமது குறைகளைத் தெரிவித்திருந்தோம். இதனையும் விட தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் நன்னாளன்று புனர்வாழ்வு, அகதிகள அமைச்சரைச் சந்தித்து எமது மக்களின் குறைபாடுகள் அனைத்தையும் விரிவாகவும், விளக்கமாகவும் எடுத்துக்கூறினோம். எனினும் இன்று வரை எங்கள் பிரச்சினைகள் எதுவும் தீர்ந்தபாடில்லை.

எனவே வறுமையின் கோரப்பிடியில் சிக்குண்டு வாழ்வதா? இல்லை சாவதா? என்ற எண்ணப்பாட்டில் ஏங்கி வாழ்கின்ற எமது மக்களின் கடற்றொழிலாளர்கள் சங்கங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து 19.09.2002 சனிக்கிழமை வல்வெட்டித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடத்திய கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம்தான் இன்று புதன்கிழமை யாழ்.செயலகம் முன்பாக மறியற்போர் செய்வதென்ற முடிவு.

இப்போராட்டத்தை யாழ்.மாவட்ட ரீதியில் அனைத்துக் கடற்றொழிலாளர்களும் ஒன்றிணைந்து நடத்த வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. எமது தொழிலாளர்கள் சுதந்திரமாக எவ்வித தடைகளுமின்றி தொழில்செய்ய அனுமதி கிடைக்கும்வரை தொடர்ந்து பகல், இரவாக மறியற்போராட்டம் செய்வதென முடிவு செய்யப்பட்டுள்ளது. எமது கடற்றொழிலாளர்கள் இதுவரை காலமும் அனுபவித்த துன்பதுயரங்களே இவ்வகையான முடிவினை எடுக்க எம்மைத் தூண்டியது.

பாதுகாப்புக் காரணங்களைச் சுட்டிக்காட்டியே எமது மக்களைக் கொடுமைப்படுத்தியும், பலவகையான கெடுபிடிகளுக்குள்ளாக்கியும், 'பாஸ்' நடைமுறையைக் கொண்டு வந்து எமது தொழிலாளர்கள் ஒடுக்குமுறையின்கீழ் அடக்கியும் வந்துள்ளார்கள்.

விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்தத்தைக் கடந்த டிசெம்பர் மாதமே அறிவித்துவிட்டனர். பதிலுக்கு அரசும் மோதல் தவிர்ப்பை அறிவித்து விட்டது. இந்தநிலையிலுமா கடற்றொழில் செய்வதற்குத் தடை விதிப்பு? புலிகள் இராணுவப் பகுதிகளுக்குள்ளும், இராணுவம் புலிகள் பகுதிகளுக்குள்ளும் நடமாடி கைகுலுக்கும் போது கடற்றொழிலாளர்கள் தொழில் செய்வதற்கு தடை விதிப்பதுதான் மனித நேயமா? புலிகளின் பெயரால் எம்மைத் தடுப்பது நியாயமா?

எந்தவித சாக்குப்போக்கும் கூறாமல், எம்மை எங்களின் கடலிலே எந்தவிதத் தடையும் இன்றி தொழில் செய்ய அனுமதிக்கும் வரை மறியற்போர் ஓயாது. எனவே இப் போராட்டம் வெற்றிபெற தாங்களும் பூரண ஒத்துழைப்பு நல்கி எமது போராட்டத்திற்கு ஆதரவளித்து பல வருடங்களாக இன்னல்கள் அனுபவிக்கும் கடற்றொழிலாளர்களுக்கு உதவிக்கரம் நீட்டி ஒத்துழைப்பு வழங்குமாறு அன்புடனும் தாழ்மையுடனும் கேட்டுக்கொள்கின்றோம். -

என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-8-10)

# முன்னைய ஆட்சியாளரைப் போன்று புதிய அரசும் மீனவரை ஏமாற்றுகிறதா?

## கிராமிய உழைப்பாளர் சங்கம் கேட்கிறது

யாழ்ப்பாணம்,ஜன.30

முன்னைய ஆட்சியாளர்கள் மீனவர்களை ஏமாற்றி வந்தது போன்றே புதிய அரசும் எம்மை ஏமாற்றப் பார்க்கின்றதா?

- இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளது யாழ்.மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கம்.

குடாநாட்டு மீனவர்கள் இன்று யாழ்.செயலகம் முன்பாக நடத்தவிருக்கும் மறியற்போராட்டத்துக்கு ஆதரவுதெரிவித்து மேற்படி சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

யுத்தநிறுத்தம், சமாதானம் என்று சர்வதேச சமூகத்திற்குப பறை சாற்றிக்கொண்டிருக்கும் புதிய அரசு இன்று தமிழ் மக்களின் கோரிக்கைகளை செல்லாக் காசாக்கி காலத்தை வீணடித்துக் கொண்டிருக்கின்றது.

தம்மீது விதிக்கப்பட்டிருக்கும் மீன்பிடித் தடையை நீக்கக் கோரி கடந்தகாலங்களில் கடற்றொழிலாளர்கள் குடாநாட்டில் பல வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுத்தார்கள்.

அப்போது சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அரசியல் தலைவர்களும் அந்த வெகுஜனப்போராட்டங்களைக் கைவிடுமாறும், மீனவர்களின் பிரச்சினைகளுக்கு உடனடியாக உரிய தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் எனவும் தெரிவித்தனர்.

ஆனால் இன்றுவரை மீனவர்களுக்கு, எந்தவிதமான மாற்றங்களும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. காலத்துக்குக் காலம் அவர்களின் எதிர்ப்பு இயக்கங்களைத் தடுத்து நிறுத்துவதில் கவனமாக இருந்தவர்கள் அவர்களின் பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வினைப் பெற்றுக்கொடுக்கத் தவறிவிட்டனர்.

தற்போதைய புதிய அரசை நம்பியிருந்தவர்களுக்கும் பலத்த ஏமாற்றமே கிட்டியிருக்கின்றது.

இவ்வாறு பல தடவைகள் ஏமாற்றங்களைச் சந்தித்துவந்த மீனவர்கள் மீண்டும் உறுதியான வெகுஜன நடவடிக்கைக்குத் தயாராகி வருகின்றார்கள். அவர்களின் பிரச்சினைகளுக்கு நியாய பூர்வமானதீர்வு கிடைப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அரசியல் தலைவர்களும் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தவறும் பட்சத்தில் இன்றைய மறியற்போராட்டம் வெற்றிபெறும் வரைக்கும் மீனவர்களுக்கு எமது தொடர்ச்சியான - முழுமையான - ஆதரவை வழங்குவோம் - என்றுள்ளது.

(க-4)

# முட்டை 5 ரூபா!

யாழ்ப்பாணம்,ஜன.30

யாழ்.குடாநாட்டில் தற்போது மீன் விலை வீழ்ச்சியடைந்துள்ளதால் முட்டையின் விலையிலும் சரிவு ஏற்பட்டுள்ளது. தற்போது கோழி முட்டை ஒன்று 5 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

முட்டை விலை குறைவடைந்துள்ள போதிலும் கோழித் தீவனங்களின் விலை அதிகரித்தே காணப்படுகிறது. இதனால் கோழிவளர்ப்போர் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

(க-8-72)

# கொக்குவில் மாணவருக்கு கற்றல் உபகரணங்கள்

யாழ்ப்பாணம்,ஜன.30

கொக்குவில் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையில் கல்வி பயிலும் வசதி குறைந்த ஐம்பது மாணவர்களுக்கு பருத்தித்துறை அன்னை ஸ்ரீ சாரதா சேவா ஆச்சிரமத்தின சுவாமிஜி சித்ரூபானந்தாவினால் கற்றலுக்கான உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இன்று புதன்கிழமை காலை நடைபெறும் இக்கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வில் உதவிக் கல்விப்பணிப்பாளர் த.இராஜலிங்கமும் கலந்து கொள்வார்.

(க-8)

# தமிழ்விழாவுக்கு ஆஸ்திரேலியா பயணமானார் கஜேந்திரகுமார்

யாழ்ப்பாணம்,ஜன.30

ஆஸ்திரேலியாவில் வருடந்தோறும் கொண்டாடப்படும் தமிழ் விழாக் கொண்டாட்டங்களில் பங்கு கொள்வதற்காக தமிழர் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.ஜி.கஜேந்திரகுமார் அங்கு புறப்பட்டுச் சென்றுள்ளார்.

ஆஸ்திரேலிய தமிழர் அமைப்புக்களின் விசேட அழைப்பின் பெயரில் அங்கு சென்றுள்ள கஜேந்திரகுமார், சிட்னி, கன்பரா, மெல்பேர்ண ஆகிய நகரங்களில் நடைபெறவுள்ள மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் ஞாபகார்த்த நிகழ்வுகளிலும் கலந்துகொள்வார்.

ஆஸ்திரேலியாவில் இயங்கும் தமிழர் மருத்துவ உதவி நிறுவனத்தின் (TAM MED AID) பிரதிநிதிகளைச் சந்தித்து ஈழத்தமிழ் மக்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகள் வழங்குவது தொடர்பாக பேச்சுகளை நடத்தவுள்ளார்.

கன்பராவில் ஆஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர்களையும், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து ஈழத்தமிழர்களின் பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடவிருக்கும் இவர், எதிர்வரும் 2ஆம் திகதி ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி அங்கு நடைபெறும் நிகழ்விலும் கலந்துகொண்டு உரைநிகழ்த்தவுள்ளார்.

(க-8)

மலட்டுத்தன்மை கொண்டவை எனக்கூறி

# இறைச்சிக்காக பசு மாடுகளும் வெட்டப்பட்டுவரும் கொடுமை

## அதிகாரிகள் சிலரும் உடந்தையா?

யாழ்ப்பாணம்,ஜன.30

யாழ்.மாநகரசபையின் கொல்களத்தில் இறைச்சிக்காக வெட்டப்படுகின்ற மாடுகளில் பசுக்களும் வெட்டப்பட்டு வருவதாக மாநகரசபையின் உறுப்பினர் மு.தவநாதன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மலட்டுத்தன்மை உள்ள பசுக்கள் என்று வைத்தியரினால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டே இவை வெட்டப்பட்டு வருகின்றபோதும், மலட்டுத்தன்மையற்ற நல்லபசுக்களும் வெட்டப்பட்டு வருவதாகவும் இதற்குச் சில அதிகாரிகளும் துணை போவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பசுவதை தொடர்பாக இந்து சமய அமைப்புக்களும் மற்றும் பொதுமக்களும் பல்வேறு குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்து வருகின்ற போதும் இச்செயலலைத் தடுத்து நிறுத்துவதற்கு எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

மலட்டுத்தன்மை உள்ள பசுக்கள் என்று பொய்யான சான்றிதழுடன் அவை வெட்டப்படுவதைத் தடுத்துக் கொல்களத்தில் காளை மாடுகளை மட்டுமே வெட்ட வேண்டும் என்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டும் என்று மாநகரசபையின் அதிகாரிகளுக்கு அவர் வேண்டுகோள விடுத்துள்ளார். இதுவிடயம் தொடர்பாக மாநகரசபை மேயருக்கும் தான் தெரியப்படுத்தி உள்ளதாகவும் எதிர்வரும் மாதாந்தக் கூட்டத்தில் இந்த விடயம் பற்றிப் பிரஸ்தாபிக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(க-10)

# திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டமாணி கற்கை நெறி

## புதியவர்கள் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஜன.30

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் 2002 - 2003ஆம் ஆண்டு சட்டமாணிப் படிப்புக்கு புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

இதற்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் 18 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருத்தல்வேண்டும். அத்துடன் ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் ஒரே தடவையில் நான்கு பாடங்களிலும் சித்தி பெய்தி இருக்கவேண்டும். (புதிய பாடத்திட்டமாயின் மூன்று பாடங்களிலும் சித்தி).

இதற்குப் பதிலாகத் திறந்த பல்கலைக்கழகத்தின் அடிப்படைப் பயிற்சி நெறிகளின் முதலாம், இரண்டாம் மட்டங்களைப் பூர்த்தி செய்தோர் அல்லது திறந்த பல்கலைக்கழக செனட் சபையினால் ஏற்றுக்கொள்ளக் கூடிய வேறு தகைமைகளைக் கொண்டிருந்தாலும் அவ்விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை யாழ்பிராந்திய அலுவலகத்தில் திங்கள், செவ்வாய் தவிர்ந்த ஏனைய நாள்களில் 250 ரூபாவைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளமுடியுமெனத் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட எண்ணிக்கையான விண்ணப்ப படிவங்களே உள்ளதால் முதலில் வருவோருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் படிவங்கள் விநியோகிக்கப்படும் என்றும் -

விண்ணப்பிப்பதற்கான இறுதிநாள் பெப்ரவரி மாதம் 27ஆம் திகதியாகும் என்றும் - யாழ்.அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கல்விசார் நடவடிக்கைகள் யாவும் கொழும்பு, கண்டி மற்றும் மாத்தறை ஆகிய இடங்களில் மட்டுமே நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(க-9)

# மீன்பிடியியல் டிப்ளோமா மாணவரை நிறுவனங்கள் புறக்கணிப்பது ஏன்?

## வேலைவாய்ப்பு பெறுவதில் சிரமங்கள்

யாழ்ப்பாணம்,ஜன.30

யாழ்.பல்கலைக்கழகத்தில் கற்று வெளியேறியுள்ள மீன்பிடியியல் டிப்ளோமா மாணவர்கள் இதுவரை எந்த நிறுவனத்திலும் உள்வாங்கப்படாமை குறித்து பெற்றோர் மற்றும் மாணவர்கள் மத்தியில் கடும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மாணவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:-

பெருந்தொகைப் பணத்தைச் செலவு செய்து இக்கற்கை நெறியைப் பூர்த்தி செய்துள்ள மாணவர்களுக்கு இன்றுவரை எந்தவொரு நிறுவனம் மூலமாகவும் வேலைவாய்ப்பு ஏதும் வழங்கப்படவில்லை. இதனால் புதிய மாணவர்கள் இக்கற்கை நெறியைத் தொடரப் பின்னடிக்கின்றனர். எம்மைச் சில அதிகாரிகள் திட்டமிட்டுப் புறக்கணிக்கின்றார்களோ தெரியவில்லை.

யாழ்மாவட்டத்தில் சுமார் 50இற்கும் மேற்பட்ட பாடசாலைகள் 'கடற்றொழில் நுட்பம்' தொடர்பான கற்கை நெறியை ஆரம்பிப்பதற்கு ஆதரவு தெரிவித்துள்ளன. எனினும் இக்கற்கை நெறியை ஆரம்பிப்பதற்கு சில கல்விசார் அதிகாரிகள் முட்டுக்கட்டை போடுவதாகத் தெரிகின்றது.

எமது டிப்ளோமா மாணவர்கள் இக்கற்கை நெறியை சேவை அடிப்படையில் கற்பிக்க முன்வந்துள்ளனர். எமக்கு அதிகாரிகள் அனைவரும் ஆதரவு தந்து செயற்படவேண்டும் - என்று அவர்கள் கூறினர்.

(க-9)

# மனித விழுமியங்களைப் பேணும் தன்மை குடாநாட்டு மக்களிடம் அருகிவருகின்றது

## கௌரவிப்பு விழாவில் உரை

யாழ்ப்பாணம்,ஜன.30

யாழ்ப்பாணத்து மக்களிடம் தற்பொழுது மனித விழுமியங்களைப் பேணுகின்ற தன்மை மிகவும் குறைந்து கொண்டு செல்கிறது. பாரம்பரியம், பண்பாடு ஆகியவற்றை எம்மண் இழந்து வருகிறது.

- இவ்வாறு நல்லை ஆதீன கலாமண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற கௌரவ விருது வழங்கும் நிகழ்வில் வாழ்த்துரை வழங்கிய யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி தி.கமலநாதன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

தான் வாழ்கின்ற சமூகத்தை ஒவ்வொரு மனிதனும் நேசிக்கவேண்டும். அவ்வாறு நேசிப்பவர்கள் தமது சமூகத்துக்குப் பலவிதமான சேவைகளையும் செய்வார்கள். இன்றைய விழாவில் கௌரவிக்கப்படுபவர்களும் தாம் வாழ்கின்ற சமூகத்துக்குச் சேவை செய்தவர்கள்தான். அவ்வாறு சேவை செய்தவர்களைக் கௌரவிப்பதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன் என்று தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி அ.சண்முகதாஸ் தனது உரையில் தெரிவித்ததாவது:-

இந்து சமயத்தின் வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்து வருகின்ற நல்லை ஆதீனத்துக்கு ஒரு கலாமண்டபத்தை அமைக்க உதவி புரிந்தவர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்களே. அவர்கள் இன்று கௌரவிக்கப்படுகிறார்கள். அதையிட்டு நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன் - என்றார்.

செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் தனதுரையில் தெரிவித்ததாவது:-

ஒப்புரவாளர் விருது சாதாரண மானவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. இந்தியாவில் சேர் பொன். இராமநாதனுக்கு ஒப்புரவாளர் விருது வழங்கினார்கள். அதேபோன்று இந்த நல்லை ஆதீனம் நால்வருக்கு ஒப்புரவாளர் விருது வழங்கிக் கௌரவித்துள்ளது. இவர்கள் அனைவரும் கலாமண்டபத்தின் நிர்மாணப் பணிக்குத் தமது பங்களிப்பினை வழங்கியவர்கள் - என்றார்.

(ம-10-180)

# உதயன்

## இந்த நிலை மாறுமா?

இந்துக்களின் புனித தினங்களில் ஒன்றான தைப்பூசத் திருநாளை முன்னிட்டு பூஜை வழிபாடுகளில் கலந்துகொள்வதற்காக நேற்றுமுன்தினம் நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்துக்குச் சென்ற பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் வழிநெடுகச் சிரமங்களை அனுபவிக்க நேர்ந்திருக்கிறது.

கடற்படையினர் மேற்கொண்ட சோதனைகள் மற்றும் 'பாஸ்' கெடுபிடிகள் காரணமாக அல்லைப்பிட்டியிலும் குறிகாட்டுவானிலும் பக்தர்கள் தரித்துநின்று பெரும் அசௌகரியங்களைச் சந்தித்துள்ளனர். தமக்கு இந்த நிலை ஏற்பட்டது குறித்து அவர்கள் விசனம் தெரிவித்திருக்கின்றனர்.

வழமையாக நடைமுறைப்படுத்தப்பட்டுவந்த ஒழுங்குக்கு மாறாக அன்றையதினம் இரு இடங்களில் வைத்துப் பயணிகளுக்கும் பக்தர்களுக்கும் இரு வேறு வகையான 'பாஸ்'களை (அனுமதிச் சீட்டைகளை) வழங்கும் புதிய நடைமுறை ஒன்றைப் படையினர் திடீரென அமுல்செய்ததை அடுத்தே இந்த நிலைமை ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

தற்போது அரசும் புலிகளும் மோதலைத் தவிர்த்து - அமைதி பேணி - ஒரு நல்லெண்ண புறச்சூழலை உருவாக்க முயன்று வரும் சந்தர்ப்பத்தில் 'பாதுகாப்பு' என்ற பெயரில் பக்தர்கள்மீது கட்டுப்பாடுகளை இறுக்குவது ஏன் என்ற கேள்வ மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

முக்கிய விரத நாள்களில் ஆலயங்களில் இடம்பெறும் விசேட பூஜை வழிபாடுகளிலும், பிரசித்தி பெற்ற ஆலயங்களின் மஹோற்சவங்களிலும் கலந்துகொள்வதற்காகப் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் - பொதுமக்கள் - தீவுப் பகுதிக்குச் செல்லும் சந்தர்ப்பங்களில் எல்லாம் இது போன்ற சோதனைக் கெடுபிடிகள், 'பாஸ்' நடைமுறைகள் திடீரென அதிகரிக்கப்படுவதும் -

அவற்றால் பக்தர்கள் தேவையற்ற சிரமங்களையும் அவலங்களையும் சந்தித்து, நொந்து போவதும் கடந்தபல ஆண்டுகளாகத் தொடர்ந்துவருகின்றது.

குடாநாட்டின் ஒரு பகுதியான தீவுப் பிரதேசம் புவியியல் ரீதியில் தனிமைப்படுத்தப்பட்டிருப்பது போன்று அங்கு சிவில்நிர்வாக விடயங்களும், அவை கையாளப்படும் விதங்களும்கூட தனித்துவமானவையாக - ஏனைய பகுதிகளில் உள்ள நடைமுறைகளுக்கும் சட்டங்களுக்கும் மாறானவையாக - இருந்துவருவது அனைவரும் அறிந்ததே.

தீவுப் பகுதிகளின் சிவில் நிர்வாகத்தைக் கடற்படையினரும் அவர்களுக்கு ஆதரவாகச் செயற்படும் அரசியல் கட்சி ஒன்றின் ஆயுதக் குழுவுமே நடத்துவதாகக் குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டு வந்திருக்கின்றன. கடந்த பொதுத் தேர்தல் காலத்திலும் அதற்கு முன்னரும் கூட அங்கு அடாவடித்தனமான பல சம்பவங்கள் நடைபெற்றன.

தீவுப்பகுதிக்குத் தாங்கள் சுதந்திரமாகச் சென்றுவர முடியாத நிலைமையே இன்னமும் அங்கு இருப்பதாக தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் இப்போதும் கூறிவருகின்றனர்.

தீவுப்பகுதி நிலைமையில் மாற்றம் ஏற்படாதவரை குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தக்கூடாது"என்ற கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

தீவுப்பகுதியின் சிவில் நிர்வாகம் மற்றும் பொலீஸ் நிர்வாகம் என்பன தொடர்பாக மக்கள் மத்தியில் நிலவும் நம்பிக்கையீனங்களைப் போக்க அரசு முயலவேண்டும். மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் தலைவர்கள் இது விடயத்தில் தொடர்ந்து அரசுக்கு அழுத்தங்களைக் கொடுக்கவேண்டும்.

---

## 'கப்பக்கட்சிகள்' விவகாரம்; கூட்டமைப்புக்குள் குழப்பம்!

கொழும்பு,ஜன.30

பொதுமக்களிடம் கப்பம் வாங்குவது தொடர்பாக நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பில் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. கப்பம் வாங்குவதானால் வெளியேறிவிடுங்கள் என்று இரண்டு கட்சிகளுக்கு மற்ற இரண்டு கட்சிகளும் எச்சரிக்கை விடுத்துள்ளன.

தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பில் தொடர்ந்தும் அங்கம் வகிக்க விரும்பினால் பொதுமக்களிடம் கப்பம் வாங்கும் கலாசாரத்தைக் கைவிட வேண்டும் என்று ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) ஆகியவற்றிடமே கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இதர இரு கட்சிகளான தமிழர் விடுதலைக் கூட்டணியும் தமிழ்க் காங்கிரஸ"ம் எச்சரிக்கை விடுத்திருக்கின்றன. கூட்டமைப்பின் கூட்டத்திலேயே இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது.

இதுபோன்ற நடவடிக்கைகளால் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்புக்குக் களங்கம் உண்டாகும். ஆகவே இது விடயத்தில் இரு ஆயுதக் குழுக்களும் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

இதற்கு அவ்விரு கட்சிகள் பதிலளிக்கையில், கட்சிகளைப் போலன்றி போராளிகளை முகாம்களில் வைத்துப் பராமரிப்பவர்கள் நாங்கள். அதற்குரிய செலவுகளுக்கு நிதி தேவைப்படுகிறது. ஆதலால் உடனடியாக முடியாவிட்டாலும் காலப்போக்கில் இது விடயத்தில் இணக்கப்பாட்டுடன் நடப்போம். கப்பக் கலாசாரத்தைக் கைவிடுவோம். என்று தெரிவித்திருக்கின்றன. (க)

---

வெலிக்கந்தைக்கு நல்லெண்ணப் பயணம்

## மக்களையும் மதத் தலைவர்களையும் சந்தித்துப் பேசினர் புலிப்போராளிகள்!

கொழும்பு,ஜன.30

விடுதலைப் புலிகளின் உள்ளூர்த் தலைவர்கள் கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்கு - நிராயுதபாணிகளாக - நல்லெண்ணப் பயணம் மேற்கொண்டனர். மக்களையும் மதத் தலைவர்களையும் படையினரையும் சந்தித்தனர்.

பொலன்னறுவை, வெலிக்கந்த பகுதிகளிலேயே கடந்த ஞாயிற்றுக் கிழமை புலிகளின் எட்டு உறுப்பினர்கள் இப் பயணத்தை மேற்கொண்டனர்.

பொலன்னறுவைப் பகுதிக்கான புலிகளின் பொறுப்பாளர் சுரேஷ்காந்த் தலைமையில் சென்ற இக்குழுவில் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் ரவி பிராந்தியப் பொறுப்பாளர்கள் சங்கர், வில்ஸன் ஆகியோரும் அடங்கியிருந்தனர்.

வெலிக்கந்தயிலிருந்து 12 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள குடாப்பொக்குனக் கிராமத்தில் பொறுப்பாளர் சுரேஷ்காந்த் செய்தியாளர் மாநாடு ஒன்றில் பேசினார். அவர் அங்கு கூறியதாவது:-

சமாதானத்தீர்வு ஒன்றைக் காண்பதற்குக் காலம் கைகூடியிருக்கிறது. இந்தமுறை அதற்கான முயற்சி வெற்றி பெறும் என்று திடமாக நம்புகிறோம்.

படையினருடனோ, பொலீஸாருடனோ எந்தவித மோதல்களிலும் ஈடுபடுவதில்லை என்று தீர்மானித்திருக்கிறோம். சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதே எமது அவா.

யுத்தத்தை வெறுக்கின்றோம். யுத்தத்தை யார்தான் விரும்புகிறார்கள்?

- இவ்வாறு அவர் கூறினார்.

கடந்தகாலங்களில் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட யுத்தநிறுத்தங்கள் மீறப்பட்டனவே என்று செய்தியாளர் ஒருவர் வினவினார்.

அதற்குப் பதிலளித்த சுரேஷ்காந்த், நிச்சயமாக அப்படியில்லை; இனிமேலும் அவ்வாறு நடைபெறாது என்று கூறினார். (க)

---

## நாட்டு நடப்பு

### கிழங்கினால் வந்த கேடு - I

பழுதிலா படித்த மேதை
பண்பாளர் பரமசாமி
கிழங்கதன் விலையைக் கேட்டு
கிறுகிறுத்து தலை சுற்ற
விழுந்தனர் கடையின் முன்னே
வியர்த்தது பிரிந்தது ஆவி
அழுதனர் கடையில் கூடி
அப்பு மேல் விழுந்து உறுண்டார்
தொழுதனர் பிணத்தை வெட்டி
சோதிக்க வேண்டாம் என்றார்
பழுதிலா நீதவானும் வந்து
பார்த்தபின் விலையைக் கேட்டார்
கிழவனார் உயிர் பிரிய
கிழங்கே காரணம் என்றார்
அழுதிட குண்டு வீச
ஆவிகள் பிரிந்தது அன்று
கிழங்கினால் உயிர் பிரிந்த காதை
கேட்டிடு! தலைவா நீயும்!

*- விகடகவி.*

---

## விவசாயிகளுக்கு மாதாந்தம் 30லீற்றர் ம.எண்ணெய் தருக!

### சம்மேளனக் கூட்டத்தில் தீர்மானம்

சண்டிலிப்பாய்,ஜன.30

உப உணவு செய்கையிலும், மரக்கறிப் பயிர்ச் செய்கையிலும் ஈடுபட்டுவரும் விவசாயிகளுக்கு மாதாந்தம் 30 லீற்றர் மண்ணெண்ணெயை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

- இவ்வாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத்தின் ஐந்தாவது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

சங்கத் தலைவர் சி.பொ.வ.க.முதலியார் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

☆ தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் காலபோக .நெல் அறுவடையில பெறப்படும் நெல்லை விவசாயிகளிடமிருந்து கமநல சேவை கேந்திர நிலையம் கொள்வனவுசெய்து தத்தமது பிரிவு. பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உலர் உணவு நிவாரணத்திற்கு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படவேண்டும் -

☆ மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளன பிரிவு விவசாயிகளின் நலன்கருதி கிருமிநாசினி தெளிப்பது, உரம் போடுவது, இயற்கைப் பசளை போடுவது, நோய்த்தடுப்பு ஆகிய விடயங்கள் பற்றி விவசாயக் கருத்தரங்குக்ளை மாதாந்தம் நடத்தவேண்டும் -

☆ நெற்காணிச் சட்டத்தின்கீழ் இப் பிரிவில் செய்கை பண்ணப்படாதிருக்கும் விவசாயக் காணிகளை விவசாயிகள சம்மேளனம் பொறுப்பேற்று, இடம் பெயர்ந்து இப்பகுதியில் வசித்துவரும வேறுபகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு பயிர்செய்வதற்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் -

☆ விவசாயிகள் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதை ஊக்குவிப்பதற்காக இலங்கை வங்கி மானிப்பாய் கிளை மூலம் 10 ஆயிரம் ரூபா வங்கிக் கடனைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும - ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டத்தில் உடுவில் கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் கே.இளங்குமரன், விவசாய போதனாசிரியர் திருமதி பரமேஸ்வரி மணிவண்ணன் ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். கூட்டத்தை அடுத்து கட்டுடை காணி ஒன்றில் காலபோக நெல் அறுவடை விழாவும் நடைபெற்றது. (ஐ-135)

---

மல்லாகத்தில் புதிதாகத் திறக்கப்பட்ட

## மதுபானக் கடையை அகற்றுமாறு கோருகின்றனர் ஊர் மக்கள்!

யாழ்ப்பாணம்,ஜன.30

மல்லாகம் நீதிமன்ற வீதியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள மதுபானக் கடையை அகற்றக்கோரி அப்பகுதி மக்கள் வலி.வடக்கு பிரதேச செயலருக்கு முறைப்பாட்டுக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

அந்த முறைப்பாட்டுக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

புதிய மதுபானக் கடையால் இப் பகுதி மக்களாகிய நாம் சொல்லொணாத் துயரத்தை அனுபவித்து வருகின்றோம். கோயில், பாடசாலை, நீதிமன்றம், நூலகம் ஆகியன அமைந்துள்ள எல்லைக்குள்ளேயே இச் சட்டவிரோத மதுபானக்கடை இயங்குகின்றது.

ஊரடங்கு அமுலில் இருக்கும் வேளையிலும் இம்மதுபானக் கடைக்குச் சென்று மதுபானம் அருந்தும் மதுப்பிரியர்கள் எமது வீடுகளில் புகுந்து கலாட்டா புரிவதுடன் தகாத வார்த்தைப் பிரயோகங்களிலும் ஈடுபட்டுவருகின்றனர்.

'குடி'காரர்களின் தொல்லைகளால எமது பிள்ளைகள் இரவில் கல்வியைத் தொடரமுடியாதுள்ளது. வேறு அசௌகரியங்களும் ஏற்பட்டு வருகின்றன.

ஆகவே இம்மதுபானக் கடையை விரைவில் அகற்றும்படி வேண்டுகின்றோம் - என்றுள்ளது. (க-8)

---

## மொறட்டுவ பல்கலைக்கு மாணவர் அனுமதி

கொழும்பு,ஜன.30

மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் நான்கு துறைகளுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தத் துறைகளில் சேரவிரும்பும் மாணவர்கள் முதலில் பரீட்சை ஒன்றுக்குத் தோற்றவேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் விண்ணப்பத்தைத் தயாரித்து நாளை 31ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பும்படி பல்கலைக்கழகப் பதிவாளர் கேட்டுள்ளார். (க-3)

---

## வன்னிப்பகுதி ஆஸ்பத்திரிகளுக்கு சூரிய மின்கலம் பொருத்தப்படும்

வவுனியா,ஜன.30

கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, மல்லாவி ஆகிய இடங்களில் உள்ள வைத்தியசாலைகளுக்கு சூரிய மின்கலங்கள் பொருத்தப்பட்டு மின் வழங்கப்படும்.

புனர்வாழ்வு, அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மடுப்பகுதிக்கான மின்சார விநியோகத்தை, பிரமணாளங்குளம் சோதனை நிலையத்துக்கு அருகில் அமைந்துள்ள மின் நிலையத்தில் இருந்து ஆரம்பித்துவைத்த பின்னர் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

சமாதான முயற்சிகளை ஊக்குவிப்பதற்காக வன்னிக்கான பொருளாதாரத்தடை நீக்கப்பட்டது. இன்று மடுப்பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படுகின்றது. இது போன்று தொடர்ந்தும் பல செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

விடுதலைப் புலிகள் அமைப்புடன் இரகசிய ஒப்பந்தம் செய்ததாகக்கூறி என்னைக் கைதுசெய்து சிறையில் அடைக்க கடந்த அரசு முயன்றது. மடுமாதாதான் என்னைக் காப்பாற்றினார். அதற்கான நன்றிக்கடனாக இன்று மடுவுக்கு மின்சாரம் வழங்கியதையிட்டு சந்தோஷம் அடைகின்றேன் - என்றார் அமைச்சர். (ஐ-3)

---

### நாளை

தை 18
வியாழக்கிழமை
(31-01-2002)
திதி : திருதியை
முன்னிரவு 10.29 வரை.
நட்சத்திரம் : பூரம்
பின்னிரவு 3.21 வரை.
சுபநேரம் : 8.06 - 9.36
ராகுகாலம் : 2.36 - 3.36
(பழைய நேரப்படி)

---

### உதயவாக்கு

தேவையற்றதை வாங்காதே; தேவையானதை விற்காதே.

---

(புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்)

## சாவகச்சேரி பஸ் நிலையம் மீண்டும் மக்கள் பாவனைக்கு!

தென்மராட்சி,ஜன.30

சாவகச்சேரி பஸ் நிலையத்தை விரைவில் பொதுமக்களின் பாவனைக்கு விடுவதற்கான ஆயத்த வேலைகளை நகரசபையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

பஸ் நிலையச் சுற்றாடலில் காணப்பட்ட பற்றைச் செடிகள் துப்புரவு செய்யப்பட்டு அங்குள்ள கிணறும் இறைக்கப்பட்டுள்ளது.

சேதமடைந்த பஸ் நிலையக் கட்டடத்தை 50 ஆயிரம் ரூபா செலவில் புனரமைப்பதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

யாழ்ப்பாணத்தில் இருந்து மிருசுவில் வரையான பஸ்சேவைகளும், தனியார் பஸ் சேவைகளும் தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாகவே பஸ் நிலையம் திருத்தியமைக்கப்படுவதாக நகரசபைச் செயலாளர் மு.செ.சரவணபவ தெரிவித்தார். (க-117)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## புதிய நூல்

"ஆற்றல் பல நல்கும் ஆஞ்சநேயர்" விலை ரூபா 40. கோப்பாய் சிவம் எழுதியது. ஆஞ்சநேயர் வழிபாட்டு முறைகள், விளக்கங்கள் அடங்கியது. பிரபல புத்தகக்கடைகளில் பெறலாம். (077)

## வகுப்புகள்

ஆங்கிலத்தில் O/L Distinction, Credit பெறுபேறு அடையவும் A/L, G.A.Q., தரம் 9,10, பல்கலைக்கழக மாணவர்களுக்கும் Paper class ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும். B.Sc. (cey) இல.85,சிவன்கோயிலடி (சிவன் கோயில் பின்புறம்), திருநெல்வேலி. (056)

கணிதத்தில் சிறந்த பெறுபேறு அடைய வேண்டுமா? கணிதம் கற்பிப்பதில் 40 வருடங்களுக்கு மேல் அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் மிகக் குறுகிய காலத்தில் சிறந்த பெறுபேறுகளுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டு அடிப்படை அறிவிலிருந்து கற்பிக்கப்படும். O/L, 10,9,8,7,6. இல.8, பிளர்ச்சஸ் ஒழுங்கை, கண்டுகுளி. மாணவர் வசதிக்கேற்ப நேரம் ஒதுக்கப்படும். (97555)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவமான, வயது 36, ஆசிரியை (விசேட பயிற்சி). அனுஷ நட்சத்திரத்துடன் 8இல் நட்பும் பெற்ற, செவ்வாய்த்தோஷம் குறைந்த ஜாதகி பொருத்தமான, அரச/கூட்டுத்தாபன உத்தியோகத்தர் விரும்பத்தக்கது. தொடர்பு: விள.இல.1441, C/o உதயன், யாழ்ப்பாணம். (033)

## விற்பனைக்கு

சிமெந்துக் கலவை போடும் இயந்திரம் (Concrete Mixture Machine) விற்பனைக்கு உண்டு. தொடர்பு:-கபரமானந்தம், மே/பா.ச.நரேத்தினம், இல. 27, 5ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (058)

## இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (97403)

புறொயிலர், கல்பேட்ஸ், இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு:ராஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P. 3529, 2867. (071)

## கசிப்பு விற்பனை

நெல்லியடி, ஜன.30

நெல்லியடி பொலீஸ் நிலைய எல்லைக்குட்பட்ட கரணவாய் அண்ணாசிலையடிப் பகுதியில் கசிப்பு விற்பனை நாளுக்குநாள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது (க-109)

## 'பொல்கொட'வில் சிமெந்து, உரம்!

யாழ்ப்பாணம்,ஜன.30

யாழ்.குடாநாட்டிக்கென பொருள்களை ஏற்றிக்கொண்டு 'பொல்கொட' கப்பல் சிலதினங்களில் பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்துசேரவுள்ளது.

தற்போது திருகோணமலைத் துறைமுகத்தில் தரித்து நிற்கும் இக்கப்பலில் ஏற்றும் பணிகள் முடிவடைந்த நிலையில் உள்ளன.

காங்கேசன்துறை சிமெந்து நிறுவனத்துக்குத் தேவையான ஒரு தொகுதி சிமெந்துப் பக்கெட்டுகளும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குத் தேவையான உரவகைகளுமே இக்கப்பலில் எடுத்து வரப்படவுள்ளன. (க-8-10)

## படையினரின் சோதனையில் தளர்வு

தென்மராட்சி,ஜன.30

வடமராட்சிப் பிரதேசத்திலிருந்து தென்மராட்சிப் பகுதிக்குச் சென்று மக்கள் மீளக்குடியமர்ந்து வருவதை அடுத்து இப்பகுதியில் உள்ள சோதனைச் சாவடிகளில் கெடுபிடிகள் குறைந்துள்ளன.

வரணி அம்மா கடையடியில் உள்ள சோதனைச் சாவடிகளில் சோதனை நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளது.

முள்ளி, கொடிகாமம், மீசாலை போன்ற சோதனைச் சாவடிகளில் அடையாள அட்டையை மட்டும் பொலீஸார் பார்வையிடுகின்றனர். (க-117)

---

# சைவ வித்தியா விருத்திச் சங்கம்

கலாசாலை வீதி, திருநெல்வேலி.

## பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**உப விடுதிக் காப்பாளர்: (ஆண், பெண்)**

* க.பொ.த. (சா/த)வுக்குக் குறையாத கல்வித் தகைமை.
* வயதெல்லை 30-60.
* விடுதியில் தங்கியிருப்பது கட்டாயம்.
* இல்லப்பிள்ளைகளைப் பரிவோடு கவனிப்பதிலும், கலாசாரம் பேணுவதிலும், வழிகாட்டுதலிலும் அர்ப்பணிப்போடு ஈடுபட வேண்டும்.

**சமையலாளர்: (பெண்)**

தேகாரோக்கியமும், சுறுசுறுப்பும், பெருமளவில் சமையல் செய்த அனுபவமும் அத்தியாவசியம். இல்லத்தில் தங்கக்கூடியவர் முன்னுரிமை பெறுவர். வயதெல்லை 35 - 55

☆ எல்லாப் பதவிகளுக்கும் தொண்டூதியம் பேசி நிர்ணயிக்கப்படும்.

☆ விண்ணப்பங்கள் கிடைக்கவேண்டிய இறுதி நாள் 05.02.2002.

சோ.பத்மநாதன்,
செயலாளர்.

(C/20530)

---

# கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி செல்வி ஞா.ஜெனனி அவர்களின் அன்புத் தந்தை

## M.D.ஞானப்பிரகாசம்

அவர்கள் 28.01.2002 காலமானதையிட்டு நாம் மிகவும் கவலை அடைகின்றோம். அன்னாரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

விஞ்ஞான பீட மாணவர்கள்
யாழ்.பல்கலைக்கழகம் (078) - 2ஆம் வருடம் A பிரிவு.

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

## அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| அன்னை | | ஆண்டவன் |
|---|---|---|
| மடியில் | | அடியில் |
| 06 | | 31 |
| - | | - |
| 03 | | 12 |
| - | | - |
| 1920 | | 2001 |



## திருமதி சின்னம்மா முருகேசு

இறைவன் திருவடி நிழலில் நித்திய ஆறுதல் தேடிய அன்னாரது ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

எங்கள் குடும்ப ஒளிவிளக்கின் மறைவு கேட்டு ஓடோடி வந்து உதவிய அயலவர்கள், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் தொலைபேசி மூலமாக அனுதாபந்தெரிவித்தவர்கள் ஆகிய அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றி.

இன்று (30-01-2002) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் ஆகிய நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

துறையா மூலை,
புலோலி வடமேற்கு,
புலோலி.

- பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள். (074)

---

# மரண அறிவித்தல்

## சரவணை றஞ்சிதராசா (றஞ்சன்)

இலந்தைக்காடு, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸினை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணை றஞ்சிதராசா 24.01.2002 வியாழக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணை தம்பதியினரின் அன்பு மகனும் நந்தினியின்(பிரான்ஸ்) அன்புக்கணவரும் சிந்துஜனின்(பிரான்ஸ்) அன்புத் தகப்பனாரும் தெய்வேந்திரம்(U.K.), மனோகரன் (U.K.), விமலா, விக்கினேஸ்வரி, றஞ்சிதமலர் ஆகியோரின் சகோதரரும் ராஜ்மோகனின் (U.K.) மாமனாரும் ஆவார்.

அன்னரின் இறுதிக்கிரியைகள் நாளை(31.01.2002) வியாழக்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இலந்தைக்காடு,
வல்வெட்டித்துறை. (075)

தகவல்:-
ச.இராசேந்திரம்
(அத்தான்)

---

பிரிட்டன் நாட்டைச் சேர்ந்த

# 'பிளாஸ்ரிக்'சிகிச்சை நிபுணர்கள் பெப். 12 இல் யாழ்.வருகின்றனர்

யாழ்ப்பாணம்,ஜன.30

'பிளாஸ்ரிக்'அறுவைச் சிகிச்சையில் நிபுணத்துவம் வாய்ந்த டாக்டர்கள் குழு ஒன்று எதிர்வரும் 12 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது.

எட்டுப்பேர் அடங்கிய இக்குழுவினர் யாழ்.போதனாவைத்தியசாலையில் விசேட சிகிச்சைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

பிரிட்டனைச் சேர்ந்த இக்குழுவினர் பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி வரையும் இங்கு தங்கியிருந்து பணியாற்றவுள்ளனர்.

எதிர்வரும் 13ஆம்திகதி காலை 9.30 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் இந்த டாக்டர்கள் குழுவை வரவேற்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனாவும் கலந்துகொள்கின்றார்.(க-10-8)

---

இளவாலை வடக்கு

இலுப்பையடி ஞானவைரவர் கோயில்

# மஹா கும்பாபிஷேக விழா

இன்று (30.01.2002) புதன்கிழமை 9மணி-4 மணி எண்ணெய்க்காப்புச்சாத்துதல்

01. 02. 2002 வெள்ளிக்கிழமை

9மணி - 10மணிக்கிடையில் மஹா கும்பாபிஷேகம்

பிரதமகுரு:
*சிவாசார்ய கிரியா வித்வசிரோமணி சிவஸ்ரீ இராமபாலச்சந்திரக் குருக்கள்*

அடியார்கள் தரிசித்து உய்தி பெறுவார்களாக.

இளவாலை வடக்கு. (072) - ஆலய பரிபாலனசபை

---

# பின்னுறுதித் தீர்வை

## யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

செல்வநாயகம் அச்சுதன்,
கனடா, தற்போது சந்தை கிழக்கு ஒழுங்கை,
மானிப்பாய்.

*வழக்காளி.*

வழ.இல.
மணநீக்கம்/283

எதிராக

அச்சுதன் பெண் சிவகரிமகேஸ்வரி
(பாலேந்திரா மகள்)
மேதர்ஸ் லேன், மானிப்பாய் தெற்கு, மானிப்பாய்.
தற்போது இல.3, 3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

*எதிராளி.*

இவ்வழக்கு 2002ஆம் ஆண்டு தை மாதம் 11ஆம் திகதி யாழ்ப்பாண மேலதிக மாவட்ட நீதிபதி திருமதி ச. இளங்கோவன் அவர்கள் முன்னிலையில் வந்தபோது, வழக்காளியும் வழக்காளி சார்பில் சட்டத்தரணி திருமதி லிங்கா துரைராஜா அவர்களும் பிரசன்னமாகியிருக்க இவ்வழக்கில் 28.12.2001 ஆம் திகதிய கட்டளையின் பிரகாரம் எதிராளிக்கான அழைப்புக் கட்டளை எதிராளியின் கடைசி வதிவிடத்தில் ஒட்டப்பட்டும் உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டும் 10.01.2002ஆம் திகதி அன்று எதிராளி மன்றில் சமுகமளிக்காதபடியால் இன்றையதினம் இவ்வழக்கு ஒருமுக விளக்கத்திற்கு நியமிக்கப்பட்டு இன்று ஒருமுக விளக்கத்திற்கு எடுக்கப்பட்டு வழக்காளியின் சட்டத்தரணி மன்றின் அனுமதியுடன் வழக்காளியின் சாட்சியத்தை நெறிப்படுத்தியபின் மன்று வழக்காளியின் சாட்சியத்தையும் ஆவணத்தையும் நன்கு பரிசீலித்து பின்வருமாறு கட்டளையிட்டு தீர்ப்பளிக்கப்படுகின்றது.

எதிராளி வழக்காளியை வன்ம உறவறுப்புச் செய்துள்ளார் என்பதைக் கண்டு வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையே 1990ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 29ஆம் திகதி நடைபெற்ற பதிவுத் திருமணத்தை இத்தால் ரத்துச் செய்து வெற்றும் வெறிதுமாக்கி கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகிறது. இப்பின்னுறுதித் தீர்வை உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் ஏன் முற்றான தீர்வையாக்கப்படக்கூடாது என்பதற்கு போதிய காரணம் காட்டப்பட்டிராவிடத்து விதிக்கப்பட்ட காலம் முடிவடைந்ததும் இப்பின்னுறுதித் தீர்வையானது முற்றான தீர்வையாக்கப்படுமென இத்தால் கட்டளையிடப்படுகிறது.

2002ஆம் ஆண்டு தை மாதம் 11ஆம் திகதி

ஒப்பம் ச.இளங்கோவன்
*மேலதிக மாவட்ட நீதிபதி.* (081)

வரைந்தது
லிங்கா துரைராஜா
*வழக்காளியின் சட்டத்தரணி.*

நீதிமன்றக் கட்டளைப்படி து.சிறீமோகன்,
*பதிவாளர்,*
*மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.*

---

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 18 | | 23 |
| - | | - |
| 03 | | 01 |
| - | | - |
| 1964 | | 2000 |



அமரர்

## சண்முகராசா இந்திரகுருபரன் (இந்திரன்)

(உரிமையாளர் - நியூ -வெஸ்கோ கிறீம் ஹவுஸ்)

திதி: 30-01-2002

விண்ணிலே முழுநிலா இடைஇடையே தான்
வரும் - எங்களின்
கண்ணிலே நீங்களோ எந்நாளும் பவனிதான்
நிலத்திலே நம் வீட்டில் தங்களின்
சுவடு தான் - அங்கந்தச்
சுவட்டில் பதிந்திட்ட நினைவு தான்
நம் வாழ்வு.

*உங்கள் பிரிவால் துயருறும்:*
*மனைவி, பெற்றோர், சகோதரர், மாமி, மைத்துனர்.* (074)

*இணுவில் மேற்கு,*
*இணுவில்.*



மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் நன்மதிப்புக்குரிய சமயத் தலைவர்கள் சமூகத்திற்கு ஆற்றிவரும் சேவைகளைப் பாராட்டி விருது வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

விழாவில் கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, ஆசிரியர் ஆறு.திருமுருகன், தென்னிந்தியத் திருச்சபைப் பேராயர் அதிவண.எஸ்.ஜெபநேசன் ஆகியோர் லயன்ஸ் பிரமுகர்களால் விருது வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்படுவதைப் படங்களில் காணலாம். (ஐ)

## மைதானத்திற்கு 10பரப்புக் காணி கொள்வனவு

நெல்லியடி,ஜன.30

கரணவாய் அண்ணாசிலையடி வள்ளுவர் சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் இளைஞர் விளையாட்டு மைதானத்திற்கென, சுமார் 7 லட்சம் ரூபா பெறுமதியான 10 பரப்புக் காணி கொள்வனவு செய்யப்பட்டிருக்கின்றது.

இதற்கான நிதியை இப்பகுதி மக்களும், வெளிநாட்டில் தொழில் பார்க்கும் இப்பகுதி இளைஞர்களும் அன்பளிப்புச் செய்ததாக, மேற்படி சனசமூக நிலையத் தலைவர் எம்.மகேந்திரன் தெரிவித்தார்.

இந்த விளையாட்டு மைதானம், அடுத்த மாதம் திறந்து வைக்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(க-109)

## 50 பேருக்கு வீட்டுத்திட்டம்

வடமராட்சி கிழக்கு,ஜன.30

வடமராட்சி கிழக்கில் நிரந்தர குடியிருப்பாளர்களுக்கு 50 வீடுகள் கட்டப்படவுள்ளன.

'ஜி.ரி.இசற்' நிறுவனத்தின் அனுசரணையுடன் இவ் வீட்டுத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வ.ப.வேலாயுதபிள்ளை தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கில் தற்போது மக்கள் வாழும் அம்பன், குடத்தனை, கரையூர், பொற்பதி குடத்தனை, மணற்காடு ஆகிய ஐந்து கிராம சேவையாளர் பிரிவுகளிலேயே இவ் வீடுகள் அமைக்கப்படவுள்ளன.(க-182)

## தோசை சாப்பிட்டு பணத்தை ஏப்பம் விட்ட இளைஞர்!

நெல்லியடி,ஜன.30

பட்டப்பகல் வேளை தேநீர் கடை ஒன்றில், தோசை சாப்பிட்ட இளைஞர் அங்குள்ள மேசை லாச்சிக்குள் இருந்த 500 ரூபா பணத்தையும் அபகரித்துக்கொண்டு தலைமறைவானார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் நண்பகல் 12.00 மணியளவில் மந்திகையில் இடம்பெற்றது. (க-109)

### யாழ்நகரில் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்க கலந்துரையாடல்:

# 'அப்பா எங்கே அம்மா' எனப் பிள்ளைகள் கேட்கின்றனர்; பதில்சொல்ல முடியாது திணறுகின்றனர் எம் தாய்மார்!

### யாழ்.நாகவிகாரை தேரரிடம் உறுப்பினர் குமுறல்

யாழ்ப்பாணம்,ஜன.30

தாய்மார் கர்ப்பமாக இருந்த வேளையில் கணவன்மார் காணாமற்போய்விட்டனர். பின்னர் பிள்ளைகள் பிறந்து வளர்ந்துவிட்டனர். இப்போது தாயாரிடம் 'அப்பா எங்கே அம்மா?' என்று அவர்கள் கேட்கின்றனர். என்னபதில் சொல்வது என்று தெரியாமற் திணறுகிறாள் தாய். இந்த அவஸ்தையை எப்படிக் கூறுவது என்றே தெரியவில்லை.

- இவ்வாறு காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தின் உறுப்பினர் ஒருவர் யாழ்நகரில் நடந்த கலந்துரையாடல் ஒன்றில் கவலையுடன் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றிய யாழ்.நாகவிகாரையின் பௌத்த மதகுருவான ரவிற்றகமுவே போதிரத்ன தேரர் இதனைத் கேட்டு "இந்தத் தாய்மார்களின் வேதனை, துயரங்களை என்னால் உணர முடிகிறது" என்று துயரத்துடன் குறிப்பிட்டார்.

கடந்த 1996ஆம் ஆண்டு காலப் பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமற்போனோரின் உறவினர்களுக்கு இடையேயான கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தின் செயலாளர் எஸ்.சற்குணம் தலைமையில் நடந்த அந்தக் கலந்துரையாடலில், சங்கத்தின் உறுப்பினர்களில் ஒருவரான த.விஜயகுமாரன் பிள்ளைகளைப் பிரிந்துள்ள பெற்றோர் குடும்பத் தலைவனை பிரிந்து அவலப்படும் தாய்மார்களின் சொல்லொணாத் துயரங்கள், வேதனைகளை விவரித்திருந்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:-

பெற்றோர்கள் தமது பிள்ளைகளையும், பெண்கள் தமது கணவன், மற்றும் சகோதரர்களையும் பல ஆண்டு காலமாக பிரிந்து வாழ்கின்றார்கள்.

தாய்மார்கள் தங்களின் பிள்ளைகளை வளர்த்தெடுக்கப் படும் கஷ்டங்களை வார்த்தைகளால் சொல்ல முடியாது. அவர்கள் தங்களின் பிள்ளைகளுக்கு கல்வி வசதியை ஏற்படுத்திக் கொடுக்கமுடியாது திணறுகின்றனர். தங்களின் உறவுகளைப் பிரிந்துள்ள இவர்கள் வாழ்நாளைக் கண்ணீருடன் கழித்து வருகின்றனர். பொருளாதார நிலைமைகளால் இவர்களின் வாழ்வே சீரழிந்து போயுள்ளது. எதிர்காலத்தை நினைத்துக் கலங்குகிறார்கள் இவர்கள். தமது பிள்ளைகளை ஆளாக்குவது எவ்வாறு என்று தெரியாமல் நாளாந்தம் இந்தத் தாய்மார் கடவுளைப் பிரார்த்தித்த வண்ணம் இருக்கிறார்கள்.

இந்த நிலைமையில்தான் தமது உறவினர்களுக்கு என்ன நடந்தது என்று கடந்த 5 வருடங்களாக அரசிடம் கேட்டுவருகின்றனர் இந்த அபலைகள்.

ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் 'சூரியக் கதிர்' இராணுவ நடவடிக்கைக்குப் பின்னர் யாழ்.குடாநாட்டு மக்களை உடன் மீளக்குடியமருமாறு கேட்டுக்கொண்டார். அவ்வாறு குடியமர்வோருக்குத் தாமே பொறுப்பு என்றும் அறிவித்தார். நம்பி வந்தோம். ஆனால் நடந்தது என்ன? பின்னர் காணாமற்போனோரின் விவரம் மூன்று மாதத்தில் தரப்படும் என்றார் அம்மையார். ஆனால் இன்னும் தந்தபாடாக இல்லை.

அரசியல்வாதிகள் எல்லோரும் வாக்குறுதிகளை அள்ளி வீசுகிறார்கள். நடப்பதோ ஒன்றும் இல்லை.

தற்போது புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத்தும் உறுதிமொழி வழங்கியுள்ளார்.

அமைச்சரின் உறுதிமொழி நிறைவேற்றப்படாத பட்சத்தில் நாம் அஹிம்சைப் போராட்டத்தில் குதிப்பது தவிர்க்கமுடியாதது. இந்தப் போராட்டத்துக்கு பௌத்த மதகுருவான நீங்களும் ஆதரவு தரவேண்டும். இந்த நிலைமையை தென்னிலங்கையில் உள்ள அனைத்து பௌத்த மத பீடங்களுக்கும் எடுத்துக்கூறி நல்லதொரு தீர்வைப் பெற்றுத்தர முயல வேண்டும் - என்றார்.

நாக விகாரையின் பீடாதிபதி இதற்குப் பதிலளிக்கையில் -

உண்மையிலேயே ஒரு தாய், தந்தை ஒரு பிள்ளையை எவ்வளவு அன்பாக, கருணையுடன் வளர்ப்பார் என்பது எனக்குத் தெரியும். இவர்களின் பிரிவு, துக்கம் எனக்கு மிகவும் கவலையைத்தான் தருகின்றது.

நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் நிலைமையினைக் கூறும்போது, பல உண்மைகளை அறியக்கூடியதாக இருக்கிறது. ஆனால் நான் இந்த விகாரையின் பூசகர் மட்டுமே. நான் அரசியல்வாதி அல்லர். என்னால் செய்யக்கூடியது ஒன்றுமட்டுமே. யாழ்ப்பாணம் வரும் தென்னிலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களை நீங்கள் சந்தித்து பிரச்சினைகளை அவர்களிடம் சொல்ல ஏற்பாடு செய்துதர முடியும் - என்றார்.

அதே சமயம் இந்தப் பிரச்சினைகளுக்கு எல்லாம் இந்த வருடத்தில் ஒரு நல்ல முடிவு கிடைக்கும் என நான் திடமாக நம்புகிறேன் - என்றும் அவர் சொன்னார். (க-180)



காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தின் கலந்துரையாடல் யாழ்நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் விசேட பிரதிநிதியாகக் கலந்துகொண்ட யாழ்.நாகவிகாரையின் பிரதமகுரு அமர்ந்திருப்பதையும் சங்கத்தின் செயலாளர் எஸ்.சற்குணம் உரையாற்றுவதையும் மற்றும் உறுப்பினர்களையும் காணலாம். (க-10-180)

# இடம்பெயர்ந்த மக்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க துரித ஏற்பாடு

### பிரதேச செயலர் ரீதியாக விவரம் திரட்டப்படுகிறது

யாழ்ப்பாணம்,ஜன.30

யாழ்.குடாநாட்டில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களிலும் மற்றும் உறவினர்களின் வீடுகளிலும் வசித்து வரும் மக்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இதுதொடர்பான விவரங்கள் தற்பொழுது பிரதேச செயலர்களால் திரட்டப்பட்டு வருகின்றன.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினாலும், அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தினாலும் இந்த வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாகவும், அதற்கான பூர்வாங்க வேலைகள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்து தங்கியுள்ள மக்களுக்குச் சொந்தக் காணி இருந்தால் அந்தக் காணியிலோ அல்லது வேறு காணிகளாக இருந்தால் காணிச் சொந்தக்காரரின் சம்மதத்துடனோ அவற்றில் வீடுகள் அமைக்கப்படும். அதற்குச் சம்மதம் தெரிவிப்போர் உரிய கடிதம் வழங்க வேணடும் எனவும், அதன் பின்பே வேறுகாணிகளில் வீடுகளை அமைக்க முடியும் எனவும் யாழ்.செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்து நீண்ட காலமாக நலன்புரி நிலையங்களில் வசித்து வரும் குடும்பங்களுக்கு அரை நிரந்தர வீடுகளும், வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குடும்பத் தலைவரை இழந்த குடும்பங்களுக்கு முழு அளவிலான வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

(க-10-86-180)

### மானிப்பாய் வீதி ஊடாக

# ஒரேயொரு பாடசாலை பஸ் சேவை; இடநெருக்கடியால் மாணவர் அவதி

மானிப்பாய் வீதி ஊடான பாடசாலை பஸ்சேவை குறைவாக உள்ளதால், மாணவர்கள் அவதிப்பட நேரிடுகிறது.

மானிப்பாய் வீதி ஊடாக ஒரேயொரு பாடசாலை பஸ் சேவை மட்டுமே இடம்பெற்று வருவதால், மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

787ஆம் இலக்கம் கொண்ட இந்த பஸ் சேவையில் மாணவ, மாணவிகள் அனைவரும் ஏற்றப்படுகின்றனர். இதனால் இடநெருக்கடி ஏற்பட்டு, சிறியவர்கள் பெரிதும் அவதிப்பட நேரிடுகிறது.

பஸ்ஸில் இடநெருக்கடி காரணமாக மாணவர்கள் பலர், சைக்கிள்களில் நீண்ட தூரம் பயணித்து பாடசாலைக்குச் செல்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மாணவர்களுக்காக மற்றொரு சேவை நடத்தப்படும் பட்சத்தில், அவர்கள் சௌகரியமாக - சிரமங்களின்றி - பாடசாலைக்குச் செல்ல முடியும் என்று பெற்றோர்கள் தரப்பில் கூறப்பட்டது. (க-ரி)

# அன்றாட பாவனைப் பொருள்கள் அகதிகளாகியுள்ள மக்களுக்கு!

### 'யுனிசெவ்' நிறுவனம் வழங்கும்

யாழ்ப்பாணம்,ஜன.30

யாழ்.குடாநாட்டில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களிலும், உறவினர் வீடுகளிலும் தங்கியிருக்கும் மக்களுக்கு 'யுனிசெவ்' நிறுவனத்தினால் அன்றாட பாவனைப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக இந்தப் பொருள்கள் வழங்கப்படவுள்ளமையால் கிராம அலுவலர்கள் மேற்படி மக்களின் விவரங்களைத் திரட்டி வருகின்றனர்.

இந்த மக்களில் ஒரு பகுதியினரை அவர்களின் சொந்த இடங்களில் மீளக்குடியேற அனுமதிக்கப்பட்டுள்ள போதிலும் அவ்வாறு குடியேறாதவர்களுக்கு இப்பொருள்கள் வழங்கப்படமாட்டா எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-10-86)

## பாடசாலை நூலகங்களுக்கு தளபாடங்கள்

யாழ்ப்பாணம்,ஜன.30

யாழ்.மாவட்டப் பாடசாலை நூலங்களுக்கான ஒரு தொகுதி தளபாடங்கள் வந்து சேர்ந்துள்ளன.

'பிறைற் ஒவ் சவுத்' கப்பலில் எடுத்து வரப்பட்ட இத்தளபாடங்கள் யாழ்.கல்வி வலயத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

விரைவில் இவை பாடசாலைகளுக்கு வழங்கப்படவுள்ளதாக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராஜா தெரிவித்துள்ளார்.(க-8-10)

# தீவகப் பகுதியில் சிவில், பொலீஸ் நிர்வாகம் செயற்படுவதை அரசு உறுதிசெய்ய வேண்டும்

ஜனநாயக ஆட்சி நடைபெறும் நாடு ஒன்றில் தேர்தல்களானது ஜனநாயக சூழ்நிலையில் நடைபெற வேண்டியதே ஜனநாயகப் பண்பாகும். இத்தகைய சூழ்நிலை இருந்தால் மட்டுமே எந்தக் கட்சியை - எந்தக் குழுக்களை - ஆட்சியில் அமர்த்த வேண்டும். யார் யாரை உறுப்பினராகத் தெரிவுசெய்யவேண்டும் என்பதை பொதுமக்கள் சுயமாகத் தீமானித்து, தமது பொதுககருத்தினை நடத்தி வைக்க முடியும். அத்துடன் தம் விருப்பை முறையாகப் பயன்படுத்தவும் முடியும்.

சர்வஜன வாக்கெடுப்பின்மூலம் அங்கத்தினர்தெரிவு நடைபெறும் வகையில் தேர்தல் நடைபெறுவதால் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் என்பன தத்தமது கொள்கைகளை விளக்கும் தமது பிரசாரங்களை மேற்கொண்டு, தமது எதிர்கால நடவடிக்கைகளை, வேலைத் திட்டங்களை சகல பாகங்களிலும், சகல மக்களுககும் எடுத்துக்கூற முடியும். அதனைக் கேட்டு, ஆராய்ந்து சரியென - நீதி, நியாயமென - தமக்குப்படுகின்ற வகையில் தமது வாக்குகளை அளிக்க முடியும்.

தேர்தல்நடத்தப்பட இருக்கும் நாடாக இருப்பினும்சரி, மாகாணமாக இருப்பினும்சரி, அல்லது மாவட்டமாக இருப்பினும்சரி அப்பிரதேசங்களின் எல்லைக்குள் அமைந்துள்ள சகலமக்களுக்கும் தேர்தலில சுதந்திரமாகப் போட்டி போடவும், தமது கட்சியின் கொள்கைகள், வேலைத் திட்டங்களைப் பரப்புரை செய்யவும், சுதந்திரமாக வாக்களிக்கவும், தாம் விரும்பும் தகுதியான உறுப்பினர்களைத் தெரிவுசெய்யவும் சமசந்தர்ப்பமும், சமஉரிமையும் வழங்கப்பட வேண்டியது அரசின் சட்டப்படியான கடமையும் பொறுப்புமாகும் ஒருபகுதி மக்களுக்கோ அன்றி ஒருசில பகுதிகளுக்கோ ஜனநாயக உரிமை வழங்கப்படுவது உண்மையான ஜனநாயக ஆட்சி அமைவதற்குக் காரணமாக அமையமாட்டாது. அண்மைக்காலங்களில் அடிக்கடி யாழ்ப்பாண மாவட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தல்கள், உள்ளூராட்சித் தேர்தல்கள் என்பன நடைபெற்றுள்ளன. சட்டப்படி தேர்தல் பிரசாரங்களை சகல இடங்களுக்கும் சென்று நடத்தவும், போட்டிபோடவும் கட்சிகளுக்கும், சுயேச்சைக் குழுக்களுக்கும் உரிமையிருந்தும் யாழ்ப்பாண மாவட்டத்தின் ஒரு பகுதியான தீவகப் பகுதிக்கு ஒரு குறிப்பிட்ட கட்சி தவிர வேறு எந்தக் கட்சியும் சென்று பரப்புரை செய்யவோ, தமது கொள்கைகளை, வேலைத்திட்டங்களை அங்குள்ள மக்களுக்கு எடுத்துக் கூறி விளங்கவைக்கவோ, முடியாத சூழ்நிலை இருந்ததை யாவரும் அறிவர். ஏன், மக்கள் சுதந்திரமாக வாக்களிக்கமுடியாத நிலையும், கள்ளவாக்குகளை எதிர்க்கவும், தடுக்கவுமாக முகவர்களை அப்பகுதிக்கு அனுப்பமுடியாத நிலையும் இருந்துள்ளது. இத்தகையநிலை இன்றும் தொடர்ந்தவண்ணமாகவே உள்ளது. இச்சூழ்நிலையில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற்றால் தீவகத்தில் உள்ள மூன்று பிரதேச சபைகளுக்குமான உறுப்பினரைத் தீவக மக்கள் சுதந்திரமாகத் தெரிவுசெய்ய முடியுமா? தாம் விரும்பும் கட்சியினை ஆட்சியில் அமர்த்தமுடியுமா? என்பது கேள்விக்குரியதொன்றாகும். இந்த அவலநிலை அகல வேண்டுமெனில் முதலில் தீவகத்தில் சரியான சிவில், பொலீஸ் நிர்வாகம் அமைக்கப்பட்டு, எந்தப் பிரஜையும் துணிவுடன் தங்கு தடையின்றி அப்பகுதிக்குச் செல்லவும், தமது கருத்துக்களைச் சுதந்திரமாகக் கூறவும் கூடியநிலை உருவாக்கப்படவேண்டும். அந்தச் சூழல் உருவாக்கப்படும்வரை கண்டிப்பாக உள்ளூராட்சித் தேர்தல்கள் ஒத்திவைக்கப்படுதல் மிகமுக்கியமானதாகும். எந்தக் கட்சியாவது உள்ளூர் தேர்தலைத் தற்பொழுதே நடத்த வேண்டும என வற்புறுத்துமானால் அது தீவக மக்களுக்குச் செய்யும் மாபெரும துரோகமாகவே மக்களால் கணிக்கப்படலாம்.

ஜனநாயகத்தை விரும்பும் தமிழர் விடுதலைக் கூட்டணி போன்ற கட்சிகள் உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டமை நியாயமானதும், நீதியானதுமாகும்.

அ.இராஜரட்ணம்
(சட்டத்தரணி)
*யாழ்.பல்கலைக்கழக சட்டவிரிவுரையாளர் (பகுதி நேரம்)*

புதிய அரசு ஆட்சிக்கு வந்து ஒரு மாத காலத்துக்கும் மேலாகியும் தீவகத்தில் உள்ள நிலையினை பல வழிகளில் அறிந்தும், இன்னும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியை அகற்றும்வரை சகல தமிழ்க் கட்சிகளின் ஆதரவையும் பெறும்பொருட்டு அரசு மௌனம் சாதிக்குமேயானால் முதலில் தன் காரியத்தை முடித்து, அதன்பின் தீவகத்தில் சுதந்திர தேர்தல் நடைபெற வழிவகுத்தபின் குடாநாடு முழுவதும் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தவேண்டும்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுககும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது. உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது பேச்சுக்களைக் குலைத்து விடும் அல்லது சமரசம் ஏற்பட்டபின் தேர்தலை வைத்தால் அவர்களும் இத்தேர்தலில் பங்குபற்ற அவர்களுக்கு வாய்ப்பிருக்கும் என்ற காரணங்களுக்காகத் தேர்தலை ஒத்திவைக்கவேண்டியது அவசியமான ஒன்றல்ல. விடுதலைப் புலிகள் இலட்சியத்துடன் போராடுபவர்கள். ஆசனங்களுக்கு ஆசைப்பட்டவர்களுமல்லர். ஆசைப்பட்டுப் போராடப்போய் போராட்டத்தைக் கைவிட்டு தேர்தலில் போட்டிக்கு நின்றவர்களுமல்லர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சகல பாகங்களிலும் சுதந்திரமாகத் தேர்தல நடத்தக்கூடிய சூழ்நிலை உருவாகும் வரை உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைப்பதே சிறந்ததாகும். ★

உ

**சுழிபுரம் அருள்மிகு ஸ்ரீபத்திரகாளி அம்பாள் தேவஸ்தான**

**ஏகதின லட்ஷார்ச்சனைப் பெருவிழா**

நிகழும் விஷு வருடம் தை மாதம் 18ஆம் நாள் நாளை (31.01.2002) வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு அர்ச்சனை ஆரம்பமாகிப் பிற்பகல் 3.00 மணிக்கு விஷேச திரவிய ஹோமங்கள் நடைபெறும். அதனைத் தொடர்ந்து விஷேசமாக அலங்கரிக்கப்பட்ட சப்பறத்தில் அம்பாள் திருவீதி உலா வருவார்.

லட்ஷார்ச்சனை பிரதமகுரு சிவாகம கிரியாரத்தினம் ஈசான சிவாச்சாரியார் சிவப்பிரம்மஸ்ரீ சிவநித்தியானந்தக் குருக்கள் தலைமையில் நடைபெறும்.

(97594) தேவஸ்தான பரிபாலன சபையினர்.

**மனநிறைவுடன் வாழ்த்துகின்றோம்**

☆ அண்மையில் 20ஆம் நூற்றாண்டின் 'பேரறிஞர்' விருதுபெற்ற எமது *அதிவண. கலாநிதி* எஸ்.ஜெபநேசன் ஐயா அவர்களையும் -
☆ விற்பனையில் இருக்கும் ஐந்து வெவ்வேறு வகை நூல்களைத் தாமே யாத்து ஒரே நாளில் வெளியிட்டு சாதனை படைத்த *கச்சாயூர் பண்டிதர் - 'கவிஞர் - 'சுகசீவன்'* நல்லாசான் அவர்களையும் -
☆ அரைநூற்றாண்டு கண்ட அச்சு இயந்திரங்கள் திருத்தும் சிறந்த சேவையாளனான அற்புததேவன் (மாயவன்) அருமை நண்பர் அவர்களையும் -

இறையாசியுடன் பல்வளமும் பெற்று புகழோங்கிப் பல்லாண்டுகள் வாழ்கவென மனநிறைவுடன் வாழ்த்துகின்றோம்.

*கணனிமுறை, சாதாரண அச்சு வேலைகள் புத்தகங்கள் கட்டுவதற்கும்*
*சாவகச்சேரி*

**A.R.S. பிறிண்டேர்ஸ்**

(முருகன் கோயில் வீதி - நெல்லியடி - கரவெட்டி)

(தென்மராட்சி பாடசாலைகள், பொது நிறுவனங்கள் மாதிரிப் படிவங்களைத் தபால் மூலம் அனுப்பினால் நேரில் வழங்கப்படும்)

*தொடர்புகளுக்கு:*

*ராஜலக்ஷ்மி திரையரங்கு, மொடேர்ன் ஸ்ரோர்ஸ்*

*பஸ்நிலையம், நெல்லியடி.* (069) *பஸ்நிலையம், கரவெட்டி.*

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம் 05 ◊ 12 ◊ 1931



மறைவு 09 ◊ 02 ◊ 2001

**திருமதி திலகவதி பொன்னுத்துரை**

திதி: 10.01.2002

அம்மா! விழிநீரில் ஈரம்
இன்னும் காயவில்லையே!

*வேரற்கேணி கந்தசுவாமி கோயிலடி,*
*மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.* (065) - குடும்பத்தினர்.

## நகரக் கடைகளில் இரவு வேளையில் திருட்டு

யாழ்ப்பாணம்,ஜன.30

யாழ்கஸ்தூரியார் வீதியில் கன்னாதிட்டிச் சந்திக்கு அருகிலுள்ள நகைக கடை மற்றும் தேநீர்க் கடை என்பவற்றுக்குள் நேற்று முன்தினம் இரவு ஓடுபிரித்து உட்புகுந்த திருடர்கள் அங்கு தமது கைவரிசையைக் காட்டிச் சென்றுள்ளனர்.

நகைக் கடையில் இருந்து சுமார் 3 பவுண் நகைகளையும் தேநீர்க் கடையில் இருந்து 15ஆயிரம் ரூபா பணத்தையும் சுமார் 25ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களையும் திருடிச்சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

(ம-4)

## தென்மராட்சி மாணவர் 9 பேருக்கு புலமைப் பரிசில்

தென்மராட்சி,ஜன.30

கடந்தவருடம் நடைபெற்ற பரீட்சைகளில் சித்திபெற்ற தென்மராட்சி பிரதேச மாணவர்கள் ஒன்பது பேருக்கு அமரர் ச.நமசிவாயம் நினைவுப் புலமைப் பரிசில்கள் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டது.

கரவெட்டி திரு இருதயக் கல்லூரியில் இடம்பெற்ற மன்ற நிகழ்வில் ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையில் உயர் சித்திபெற்ற மூன்று மாணவர்களுக்கான புலமைப் பரிசில் நிதியை சாவகச்சேரி நகரசபை செயலாளர் மு.செ.சரவணபவவும், ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சையில் அதிகூடிய சித்தி பெற்ற மூன்று மாணவர்களுக்கான நிதியை சாவகச்சேரி நகர கிராம அலுவலர் வை.இராசரத்தினமும், ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மூன்று மாணவர்களுக்கு அமரர் ச.நமசிவாயத்தின் மகனான ந.சிவபாலனும் வழங்கினர்.

(க-117)

**தவறிவிட்டது**

**து.கோமகன், "சிவா இல்லம்", புலோலி தெற்கு** என்னும் முகவரியில் வசிக்கும **த.நடேஸ்வரன்** என்பவருடைய கைச்செயின் ஒன்று *மந்திகை, அச்சுவேலி, நிலாவரை வீதி, இராசபாதை, உரும்பிராய், மருதனார் மடம், சுன்னாகம், கந்தரோடை, கே.கே.எஸ். வீதி, பிரதான வீதி, சின்னக்கடை (குருநகர்)* வரையுள்ள வீதிகளில் எங்கோ தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் அல்லது சின்னக்கடை, *குருநகர் வரன் நகை மாளிகையில* ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (070)

**யாழ். பல்கலைக்கழகம்**

**கேள்விப்பத்திர அறிவித்தல்**

**சீருடைத்துணிக்கான கேள்வி கோரல்**

யாழ். பல்கலைக்கழகத்திற்கு 550 மீற்றர் கருஞ்சாம்பல் நிறக் காற்சட்டைத் துணி வழங்குவதற்கு முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக ரூபா 250/- பெறுமதியான காசுக் கட்டளை/தபாற்கட்டளை நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம் என்ற பெயரில் பெறப்பட்டு கேள்விப் பத்திரத்துடன் இணைக்கப்படல் வேண்டும். 6"x 6" அளவுடைய மாதிரித்துண்டு கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

தெரிவுசெய்யப்பட்ட கேள்விப்பத்திரதாரர், உறுதிசெய்யப்பட்ட கட்டளை வழங்கப்பட்டு மூன்று (3) வாரங்களுக்கிடையில், யாழ். பல்கலைக்கழகப் பண்டகசாலையில் இவற்றை வழங்க ஆயத்தமாக இருக்கவேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் கீழ்க்குறிப்பிடப்படும் ஏதாவதொரு விலாசத்திற்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ 2002.02.15ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திர உறையின் இடதுபக்க மேல்மூலையில் "சீருடைத்துணி கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிடவும்.

1. நிதியாளர், யாழ்.பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (தொலைபேசி இல. 021-2644)
2. நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம், மே/பா வரையறுக்கப்பட்ட யாழ்ப்பாணக் கூட்டுறவுச் சங்கம், ஈ.ஜீ.4, சென்ரல் வீதி, கொழும்பு - 12. (தொலைபேசி இல.435620)

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம். (C/20500)

**31ஆம் நாள் நினைவஞ்சலி**

மலர்வு 22 - 06 - 1949



உதிர்வு 31 - 12 - 2001

அமரர்

**அப்பர் சோதிநாகரத்தினம்**

அன்பின் திருவுருவாய் பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் சிகரமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
ஊர் புகழும் உத்தமனாய் பார்போற்ற வாழ்ந்து
அன்போடும் பாசத்தோடும் எம்மை வளர்த்து
நல்வழி காட்டிய எங்கள் தந்தையே!
மாதம் ஒன்று கடந்த போதும் உங்கள் நினைவுகள்
எம்மை விட்டு என்றென்றும் நீங்காது!

உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*"பெரியஞ்சீமா"*
*கரணவாய் வடக்கு, கரவெட்டி.* - மனைவி, பிள்ளைகள்.

(057)

# புதிய அரசின் சமாதான முயற்சி வெற்றிபெற

# இடமளிப்பாரா ஜனாதிபதி சந்திரிகா?

**போர்க்களங்களில் தீர மிகு சாதனைகள் படைத்து உயர் நிலைக்கு வந்தவர் தமிழ்ச்செல்வன். அதேபோல பேச்சு வார்த்தைகளில் திறம்படக் கலந்துகொள்வதும் அவருக்குக் கைவந்த கலையாகும். நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுகளை ஒட்டி தமிழ்ச்செல்வனின் பெயர் மீண்டும் அடிபடத்தொடங்கியுள்ளது. தமிழ்ச்செல்வனின் திறமைகள் குறித்தும், சமாதான முயற்சிகள் தொடர்பாக ஜனாதிபதி வெளியிடும் பாதகமான கருத்துக்கள் குறித்தும் இக்கட்டுரை ஆராய்கிறது. "ரோஹண புத்தர" என்பவரால் எழுதப்பட்டு 27.01.2002 திகதிய 'லங்காதீப' பத்திரிகையில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

சாவகச்சேரி, மந்துவில் கிராமத்தில் பிறந்த தமிழ்ச்செல்வன், விடுதலைப் புலிகளின் 4ஆவது படைப் பிரிவில் ஆயுதப் பயிற்சிகளைப் பெற்றார். பயிற்சிகளின் பின்னர் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் பாதுகாப்புப் பிரிவில் பணியாற்றினார்.

விடுதலைப் புலிகளுக்கு, இயக்கத்தினால் பெயர் வழங்கப்பட்டு அப்பெயர்களே வழங்கிவந்தாலும் தமிழ்ச்செல்வன் என்பது அவரது இயற்கைப் பெயரே ஆகும். "தினேஷ்" என்றும் இயக்கப் பெயர் அவருக்கு உண்டு. எனினும் அந்தக் காலத்திலிருந்தே அவர் அந்தப் பெயரைப் பயன்படுத்திவரவில்லை.

1987இல் யாழ்ப்பாணம் வந்த தமிழ்ச்செல்வன் போர்களப் பயிற்சிகளைப்பெற்ற தலைவனானார். பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதும் அவருக்குக் கைவந்த கலையாயிற்று. 1994இல் சந்திரிகா பண்டாரநாயக்கா சமாதானத் தேவதையாகத் தோன்றி, ஆட்சியைக் கைப்பற்றியிருந்தார். வடபகுதி மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற அவரால் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட தூதுக் குழுவுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் பொறுப்பு தமிழ்ச்செல்வனிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா மற்றும் இந்தியப் படைகளை எதிர்த்து போர்க்களம் இறங்கிய தமிழ்ச்செல்வன், பல சந்தர்ப்பங்களில் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார். இருப்பினும் அவருக்குக் காலில் ஏற்பட்ட காயம் யுத்தத்தின் நினைவாக வீர வடுவாக அமைந்துள்ளது.

வடமராட்சித் தாக்குதலின்போதும், இந்திய அமைதிப் படையின் "ஜவான்" இராணுவ நடவடிக்கையின்போதும் விடுதலைப் புலிகள் தரப்பில் தமிழ்ச்செல்வன் ஆற்றிய வீரமிகு சாதனைகள் அவரை விரைவில் உயர் நிலைக்குக் கொண்டுவந்தன. இந்த நடவடிக்கைகளைத் தொடர்ந்து தமிழ்ச்செல்வன் தென்மராட்சிப் பொறுப்பாளராகவும், பின்னர் யாழ்ப்பாணப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்பட்டார். 1991இல் ஆனையிறவுத் தாக்குதலின் போது ஆரம்ப நடவடிக்கையின் போதே தமிழ்ச் செல்வன் காயமடைந்தார். 1993இல் பூநகரியில் மேற்கொள்ளப்பட்ட "தவளைப்பாய்ச்சல்" நடவடிக்கையிலும் தமிழ்ச்செல்வன் முக்கிய பங்கினை ஆற்றினார். தமிழ்ச்செல்வன் திருமணமானவர். அவரது மனைவி விடுதலைப் புலிகளின் செய்தி வெளியீட்டுப் பிரிவில் பணியாற்றுகிறார். இந்தத் தம்பதியினருக்கு ஒரு மகன் இருக்கிறார்.

*2001 மே 15ஆம் திகதியன்று* தமிழ்ச்செல்வன் மீண்டுமொருமுறை மயிரிழையில் உயிர்தப்பினார். நோர்வே நாட்டின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மைச் சந்திக்க மல்லாவியிலுள்ள புலிகளின் தலைமைப் பணிமனைக்குச் சென்றுகொண்டிருந்த வேளையில், மரத்தில் மறைத்து வைக்கப்பட்ட கிளைமோர் குண்டுத் தாக்குதலிலிருந்து தமிழ்ச்செல்வன் உயிர்தப்பினார். இருப்பினும், அவரைப் பின் தொடர்ந்து வந்த வாகனம் குண்டுத் தாக்குதலுக்கு இரையானது. போர் நடவடிக்கைகளில் மாத்திரமன்றி பேச்சுவார்த்தைகளிலும் கைதேர்ந்த தமிழ்ச்செல்வன்மீது மீண்டும் அனைவரது கவனமும் திரும்பியுள்ளது.

கடந்த 15ஆம் திகதி வன்னிக்குச் சென்ற பத்திரிகையாளர்களின் சந்திப்பின்போது தமிழ்ச்செல்வன் சமாதானம் தொடர்பான புதிய எதிர்பார்ப்புக்களை உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்தியாளர்களுக்கு எடுத்துரைத்தார். புதிய அரசு வடக்கு - கிழக்குப் பிரச்சினையைத் தீர்க்கும் எனப் பலத்த எதிர்பார்ப்புடன் உரையாடினார். வடக்குக் கிழக்கிலுள்ள மக்களின் சகஜவாழ்க்கை பாதிப்படைந்து - விளைநிலங்கள் தரிசு நிலங்களாகி - குண்டுகள் மற்றும் துப்பாக்கிகளின் ஒலிகள் ஆட்சிசெய்த விதத்தை எடுத்துரைத்தார். வடக்கில தமிழ்ச்செல்வனைப் போலவே தெற்கிலும் பலர் சமாதானத்தை வேண்டுகின்றனர். இருபது ஆண்டுகளாக இடம்பெற்றுவரும் யுதத்திற்கு முடிவு காணப்படவேண்டும் என வேண்கின்றனர்.

பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த சுமார் 20 ஆயிரம்பேர் உட்பட சுமார் 60 ஆயிரம் பேரின் உயிர்களைக் காவுகொண்டதும், சுமார் 50ஆயிரம் கோடி ரூபாவை விழுங்கியதுமான இந்தக் சாபக்கேடான யுத்தத்தை முடிவுக்குக்கொண்டுவந்து - அதள பாதாளத்திற்குச் சென்று கொண்டிருக்கும் நாட்டைக் காப்பாற்ற இதுவே இறுதிச்சந்தர்ப்பம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தமிழ்ச்செல்வனும் இதையே தெரிவிக்கிறார். சிங்கள மக்களுக்குள்ள உரிமைகள் தமிழ் மக்களுக்கும் வேண்டும் என அவர் கூறுகிறார். ஆத்ம கௌரவத்துடனும், திருப்தியுடனும் வாழும் உரிமை தமிழ் மக்களுக்கு இருக்கவேண்டும் எனத் தெரிவிக்கிறார்.

சிங்கள மற்றும் தமிழ் இனங்களுக்கிடையே முறிவடைந்துள்ள நம்பிக்கை, சிதைந்துள்ள புரிந்துணர்வு, அழிந்துபோன நட்புறவு ஆகியனவற்றிற்கு மீண்டும் புத்துயிரூட்ட யுத்தநிறுத்தம் வழிவகுக்கும். இவை தொடர்பாக நேர்மையுடன் செயற்படுவதாக பிரதமர் தெரிவித்துள்ளார். நாட்டில் உள்ள அனைவரும், விடுதலைப் புலிகளும் நேர்மையுடன் செயற்பட்டால் நாட்டை அச்சுறுத்தும் இந்தத் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியும் எனவும் பிரதமர் கூறியுள்ளார். பிரதமர் இது தொடர்பாக இதுவரை மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து விடுதலைப் புலிகள் திருப்தியடைந்துள்ளனர்.

கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில் சமாதான முயற்சிகள் தொடர்பாக குறிப்பிடத்தக்களவு நடவடிக்கைகளை மேற்கொண்ட முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சிகளுக்கு தமது கட்சி பூரண ஒத்துழைப்பு வழங்குவதாகத் தெரிவித்துள்ளார். கதிர்காமரின் கூற்றில் உள்ள நேர்மைத்தன்மை குறித்துப் பிரச்சினை ஏதுமில்லை.

ஆனால் தீர்வு முயற்சிகள் முளைவிடமுன்னர் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த சிலர் குறைகூற ஆரம்பித்துள்ளனர். விடுதலைப் புலிகளை ஒருபோதும் நம்பமுடியாது என்கிறார்கள். புலிகள் இன்று ஒன்றும் நாளை மற்றொன்றும் நாளைமறுதினம் வேறொன்றும் கோருவார்கள்; எனவே அவர்கள்மீது எதுவித நம்பிக்கையையும் வைக்கக்கூடாது என, பிரபாகரனிடம் வடக்குக் கிழக்கை இடைக்கால நிர்வாகம் அமைக்க 10 ஆண்டுகளுக்கு வழங்கச் சம்மதித்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தற்போது தெரிவித்துள்ளார். ஜனாதிபதியின் கூற்றிற்கும் அவரது முன்னாள் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரின் கூற்றிற்கும் இடையே தெளிவான வித்தியாசம் - தெளிவான சமிக்ஞை உள்ளது.

பொ.ஐ.முன்னணி சமாதான முயற்சிகளுக்கு இடையூறாக இருக்காது என கதிர்காமர் தெரிவிக்கும் வேளையில், ஜனாதிபதி பாரா மிஹ்லார் அஹமட் என்பவருக்கு வழங்கிய பேட்டியில், யுத்தமோ அல்லது சமாதானமோ எதுவாய் இருப்பினும் அரசியல் அமைப்பு ரீதியாக முடிவெடுக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடமே உள்ளது எனத் தெரிவித்துள்ளார். உங்களுக்குள்ள அந்த அதிகாரத்தை நீங்கள் பாவிப்பீர்களா? என அஹமட் வினவியபோது அது குறித்து தான் பின்னரே தீர்மானிக்க உள்ளதாக ஜனாதிபதி பதிலளித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்தக் கருத்தின் அர்த்தம்தான் என்ன?

தனது ஆசீர்வாதத்துடனேயே - தனது அதிகாரத்தின்கீழ் மட்டுமே - சமாதானத்தை மேற்கொள்ள முடியும் என்பதுபோல்லல்லவா அவர் கூறியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க விருப்பும் விதத்தில், நோர்வே அரசுப் பிரதிநிதிகள் மற்றும் சொல்ஹெய்ம் ஆகியோருடன் இணைந்து சமாதானத்தைத் தேடமுடியாதா?

ஏழு ஆண்டு காலமாக யுத்தத்தையோ அல்லது சமாதான முயற்சிகளையோ உரியவிதத்தில் மேற்கொள்ளமுடியாத ஜனாதிபதி, புதிய அரசின் முயற்சிகளுக்கு - புதிய அரசின் எதிர்பார்ப்புகளுக்கு - ஏன் முழுநாட்டின் எதிர்பார்ப்புகளுக்குமே தனது இந்த நிலைப்பாட்டில் இருந்து கொண்டா ஒத்துழைப்பை வழங்கவுள்ளார். சந்திரிகா அரசே சமாதான முயற்சிகளுக்கான கதவை மூடியது எனத் தமிழ்ச்செல்வன் குற்றஞ் சுமத்துகிறார். சமாதானத் திட்டத்திற்காக முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருடன் (தற்போதைய பிரதமர்) காலையில் சிரித்துப்பேசி மாலையில் திட்டித்தீர்க்கும் ஜனாதிபதியின் போக்கிற்கு யார் பொறுப்பு?

அஹமட்டிற்கு அளித்த பேட்டியில் ஜனாதிபதி தொடர்ந்தும் பாதகமான நிலைப்பாட்டையே தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் பேட்டியின் சாரமானது தன்னைத்தவிர வேறு எவரும் விடுதலைப் புலிகளைப் பற்றி நன்கு அறிந்திருக்கவில்லை என்பதாகும். அவ்வாறெனின் விடுதலைப் புலிகள்பற்றி தனக்குள்ள அறிவிற்கு அமையவே ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஜனாதிபதி எதிர்பார்க்கிறாரா?

தமிழ் மக்களின் வாக்குகளைச் சற்றுக் கூடுதலாகப் பெறுவதற்காகவே ரணில் விக்கிரமசிங்கவின் அரசு, விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடையை நீக்க முயற்சிக்கிறது என ஜனாதிபதி கூறுகிறார். இத்தகைய ஒரு பாரதூரமான பிரச்சினை குறித்து நாட்டின் ஜனாதிபதி - ரணில் விக்கிரமசிங்கவின் அமைச்சரவையின் தலைவி - இவ்வாறு கருதுவாராயின் மற்றையோரின் கருத்து எவ்வாறானதாக அமையும்?

பொதுவாக இந்நாட்டுச் செய்தியாளர்களுக்கு மிகவும் அரிதாகவே பேட்டி வழங்கும் ஜனாதிபதி, சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப் பட்டதைத் தொடர்ந்து, இவை செய்யக் கூடிய வேலைகளா? இவற்றைச் செய்ய முடியுமா? எனப் பேட்டிகளில் கேட்பதும், அதிகளவில் பேட்டிகளை அளிக்க முன்வருவதும் புரிந்துகொள்ளக் கூடியதே.

ஜனாதிபதியின் கட்சிப் பேச்சாளர் சரத் அமுனுகமவும் மீண்டும் ஐ.தே. கட்சி - விடுதலைப் புலிகள் கூட்டுப் பற்றிக் கூறிவருகிறார். பொ.ஐ. முன்னணியுடன் தகுதிகாண் அரசு அமைத்த ஜே.வி.பியும் நாடு துண்டாடப்படப்போகிறது என நாடெங்கும் "போஸ்டர்கள்" ஒட்டுகின்றனர். இவர்கள் அனைவரது பக்கத்து நியாயம் தான் என்ன? இவர்கள் தமது குறுகிய நோக்கங்களைக் கைவிட்டு அரசின் சமாதான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பை வழங்குவார்களா? எங்களால் செய்ய முடியாமற்போனதால் அல்லது எங்களுக்குச் செய்ய இடமளிக்கப்படாததால் எனக் கூறி சமாதான முயற்சிகளுக்கு அவர்கள் குழிபறிக்க முயலாதிருக்க வேண்டும் என்பதே பொதுமக்கள் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கும் விடயமாகும்.

குழிபறிக்கப்படமாட்டாது எனக் கதிர்காமரின் பேச்சுக்கள் உணர்த்துகின்றன. ஆனால் ஜனாதிபதியின் கருத்துக்கள் அவ்வாறு அமையவில்லை. அமுனுகமவின் மற்றும் ஜே.வி.பியின் கருத்துக்களும் ஜனாதிபதியின் கருத்துக்களை ஒத்தே இருக்கின்றன.

இவர்கள் புலிகள் குறித்து முன்கூட்டியே தீர்மானத்திற்கு வந்துள்ளனர். அவர்களின் தீர்மானத்தின்படி புலிகள் எப்போதும் பயங்கரவாதிகள் - புலிகள் ஒருபோதும் ஈழக் கோரிக்கையைக் கைவிடமாட்டாகள் - புலிகள் ஒருபோதும் உண்மை பேசமாட்டார்கள். எனவே விடுதலைப் புலிகளை நம்பக்கூடாது என்பதாகும்.

பிரபாகரன் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி - வடக்குக் கிழக்கையும் கைப்பற்றி - திருகோணமலைத் துறைமுகத்தையும் கைப்பற்றிவிடுவார் என ஜனாதிபதி தெரிவிக்கிறார். இதற்கான காரணத்தையும் ஜனாதிபதி கூறுகிறார். படையினர் கடந்த 20 மாதங்களாக படை நடவடிக்கைகளில் ஈடுபடாமல் வாழாவிருக்கிறார்கள். ஆகவே அவர்களது மனவலிமை மழுங்கிப் போய்விடும் என்கிறாள் அவர். ஜனாதிபதியின் இந்தக் கருத்தானது மக்களையும் படையினரையும் சமாதானத்துக்கெதிராகத் தூண்டிவிடுவதாக இல்லையெனில் சமாதான முயற்சிகளுக்கு இடையூறாக இல்லை எனில் வேறு என்னவாக இருக்கும்?

அரசின் சமாதான முயற்சிகளில் தான் பங்குபற்றமாட்டேன் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். அரசு செயற்படும் விதத்தின்படி என்னை ஒரு துச்சாகக்கூட ஏற்கவிரும்பமாட்டார்கள் என நினைக்கிறேன் என ஜனாதிபதி தானாகவே தீர்மானத்திற்கு வந்துள்ளார். ஆனால் அரசோ இவ்வாறான கருத்தை வெளியிடவில்லை. அரசுடனான தொடர்புகளைக் கவனிக்க ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கதிர்காமரும் அவ்வாறான கருத்தை வெளியிடவில்லை.

அரசின் செயற்பாடுகளில் குறைபாடுகள் இருக்கக்கூடும். இருப்பினும் அவற்றை நல்மனதுடன் எடுத்துக் காட்டி, தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண உற்சாகமளிக்க வேண்டுமே தவிர குறைகாண்பது நாகரிகமான செயலாகாது.

பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்குட்பட்ட ஆசிய ஆபிரிக்க நாடுகளில் ஏனைய நாடுகளை விட 20 ஆண்டுகளுக்கு முன்னராக சர்வஜன வாக்குரிமைபெற்ற வரலாற்றைக் கொண்டது இந்த நாடு. அவ்வாறான ஒரு நாட்டின் இன்றைய தலைவர்களின் செயற்பாடுகள் இவ்வாறு அமைவது கவலைக்குரியது.

கொழும்பிலிருந்து பேட்டிகள் அளிக்கும் பலர் யுத்தத்தின் வேதனையை உணர்ந்தவர்கள் அல்லர். நாடு துண்டாடப்படப்போகிறது என நாடெங்கும் போஸ்டர்கள் ஒட்டுபவர்களுக்கும் யுத்தத்தின் வேதனை தெரியாது. படைகளுக்குத் தங்கள் பிள்ளைகளை அனுப்பிய ஏழைக் குடும்பங்களுக்கு மட்டுமே யுத்தத்தின் வேதனை தெரியும். யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரவேண்டிய தேவை அந்த ஏழைக் குடும்பங்களுக்கே உள்ளது. அவர்களது நினைவில், நெஞ்சத்தில் கொழுந்து விட்டெரியும் தீச்சுவாலையை அணைக்க இதுவரை எந்தவொரு ஆட்சியாளர்களுக்கும் முடியாமற்போனது. அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ள மணலாற்று வாசிகள் யுத்தத்தின் ருசியை அறிவர். மன்னம்பிட்டி மக்களும் அதை அறிவர். திருகோணமலையில் திரியாய் மக்கள் அறிவர். வவுனியாவில் ஸ்ரீ போதி தக்ஷிணாராமய விஹாரை விமலசார தேரர் அறிவார். தந்திரிமலை ரஜமஹா விஹாராதிபதி சந்தரத்ன தேரர் அறிவார். இருப்பினும் யுத்தத்தின் ருசி அறியாதவர்களும் இந்த நாட்டில் இருக்கவே இருக்கிறார்கள்.

**தமிழில்: கஜனி**

அவர்களில் பலர் கொழும்பிலிருந்து அறிக்கைகளைவிடும் விரிவுரையாளர்கள் - எழுத்தாளர்கள் அல்லது சிந்தனையாளர்கள், ஒருசில அரசியல்வாதிகள் ஆகியோரின் பிள்ளைகளில் ஒருவர்கூட இராணுவத்தில் இல்லை. அவர்களது பிள்ளைகள் சுகபோகத்துடன் கொழும்பில் வாழ்கின்றனர் அல்லது வெளிநாடுகளில் கல்வி கற்கின்றனர்.

சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடுபவர்கள் இவ்வாறு இரண்டுங்கெட்டான் வாழ்க்கை நடத்தும் இவர்களே. தொழிலுக்காக மரணத்தைத் தேர்ந்தெடுத்த ஏழைமக்களின் பிள்ளைகள் இவர்களுக்கு விளையாட்டுப் பொருள்கள். எனவே சமாதானம் குறித்து அவர்களிடம் இருந்து இதைவிடப் பெரிதாக எதையும் எதிர்பார்க்கமுடியாது?



**கத்தோலிக்க கலை இலக்கியவட்டத்தின் ஆதரவில் அண்மையில் வெளியிடப்பட்ட 'தேவகானம்' இசை ஒலிப்பேழை வெளியீட்டு வைபவத்தில் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஒலிப்பேழையை வெளியிட்டுவைக்க, முதற் பேழையை கலையார்வன் கு. இராயப்பு பெற்றுக்கொள்வதையும் அருகில் பாடசாலையாசிரியர் யோசப்பாலா நிற்பதையும் படத்தில் காணலாம்.**

**கத்தோலிக்க கலை இலக்கியவட்டத் தலைவர் து. ஆரோக்கியதாசன், யாழ். பல்கலைக்கழக அரச அறிவியல் சமூகவியல் துறைத் தலைவர் கலாநிதி என். சண்முகலிங்கன் ஆகியோர் அமர்ந்துள்ளனர்.** (ம-51)

# கேள்வி அறிவித்தல்

வட்டுக்கோட்டை, அடைக்கலம்தோட்டம் ஸ்ரீ கந்தசுவாமி கோயிலின் முன், பின் கோபுரங்கள், பண்டிகைகள் பழுது பார்க்கப்பட்டு வர்ணம் திட்டப்படவேண்யுள்ளதால் இத்துறை சார்ந்தவர்களிடமிருந்து மதிப்பீட்டுத்தொகை கோரப்படுகின்றது.

நேரில் பார்வையிட்டு உங்கள் மதிப்பீட்டு அறிக்கையையும் உங்கள் கைவண்ணத்திற்கு சான்றுபகரும் இடங்களையும் குறிப்பிட்டு 07.02.2002 ஆம் திகதிக்கு முன்னர் "செயலாளர், பரிபாலன - திருப்பணிச்சபை, அடைக்கலம்தோட்டம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில், வட்டுக்கோட்டை" எனும் முகவரிக்கு தபால்மூலம் விண்ணப்பிக்கவும்.

*க.அண்ணாமலைநாதன்*
*தலைவர்.*

*மு.ஜெயநாதன்*
*செயலாளர்.*

ஆலய பரிபாலனசபை, திருப்பணிச்சபை.

(087)

---

## அருள்திரு.யோண் பிரான்சிஸ் அ.ம.தி.

அவர்களின்

## அஞ்சலி நிகழ்வும் இறுதி யாத்திரையும்

அருள்திரு.யோண் பிரான்சிஸ் அ.ம.தி. நேற்றையதினம் (29.01.2002) செவ்வாய்க்கிழமை கொழும்புத்துறை அமல உற்பவ இல்லத்தில் இறைபதமடைந்தார். அடிகளார் அமரர்களான மரியாம்பிள்ளை பிரான்சிஸ் - மேரி எலிசபேத் ஆகியோரின் அன்பு மகனாவார்.

அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்தந்தை அவர்கள் 1947ஆம் ஆண்டு அருள்பணியாளனாகத் திருநிலைப்படுத்தப்பெற்று அநுராதபுரம், ஊர்காவற்றுறை, நாவாந்துறை, நல்லூர், மிருசுவில், பாஷையூர், ஏழாலை ஆகிய பங்குகளில் பணியாற்றியுள்ளார்.

புனித பத்திரிசியார் கல்லூரியிலும், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியிலும் அதிபராகக் கடமையாற்றி யாழ்.மறைமாவட்ட கல்வி நிர்வாகத்துறையில் பணி புரிந்துள்ளார்.

அமரரான அடிகளாருக்கு அளிக்கும் அஞ்சலி நிகழ்வுகளும் இறுதியாத்திரையும் இன்று (30.01.2002) புதன்கிழமை பின்வருமாறு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

*காலை 6.30 மணிக்கு* - புனித சூசையப்பர் ஆலயம் திருப்பலியும், அஞ்சலியும் (கொழும்புத்துறை)

*காலை 8.30 மணிக்கு* - புனித அந்தோனியார் ஆலயம் திருப்பலி (பாஷையூர்)

*காலை 10.30 மணிக்கு* - புனித பத்திரிசியார் கல்லூரி சிற்றாலயம் வழிபாடும், அஞ்சலியும்

மாலை 4 மணிக்கு - புனித மரியன்னை பேராலயம் ஆயர் தலைமையில் கூட்டுத்திருப்பலியும், இறுதியாத்திரையும்

அருள்திரு.ஜீவேந்திரா போல் அ.ம.தி.
தொடர்பகம்,
*ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*

(083)

---

# கண்ணீர் அஞ்சலி

யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம், உரும்பிராய்.
எமது பாடசாலை அதிபர் **திரு.க.கனகராசா** அவர்களின்
அன்புத் தந்தை

## இளையதம்பி கந்தையா

அவர்கள் (29.01.2002) அன்று இறைபதம் அடைந்தார். அன்னாரின் ஆதமா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*யா/வயாவிளான்*
*ம.ம.வி.* (088) - பாடசாலைச் சமூகத்தினர்.

---

# கண்ணீர் அஞ்சலி

எமது ஆலயத்தின் முன்னாள் தலைவர்

## இராசையா கந்தையா

*(இளைப்பாறிய அதிபர்)*

அவர்கள் 21.01.2002 அன்று இயற்கை எய்தியமையையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன் மணி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவில் நந்தாவில்
கற்புலத்து மனோன்மணி அம்பாள்
ஆலய பரிபாலன சபை.

(C-20533)

---

# முதலாம் ஆண்டு நினைவுகள்

தோற்றம் 20 - 10 - 1938



மறைவு 09 - 02 - 2001

## அமரர் முத்துத்தம்பி இராஜநாயகம்

திதி:30.01.2002

ஆண்டுகள் பல ஆனாலும் தெய்வமே உமது அன்பு முகம் மாறாது நான் பாவி; பெற்ற மகளையும் இழந்தேன். நீங்கள் இருக்கிறீர் என்று மெல்லமெல்லத் தேறிவந்தேன். என் தெய்வமே! இன்று என்னை ஆதரவு அற்ற அநாதையாகத் தவிக்கவிட்டு திடீர் என கண்மூடித் திறப்பதற்குள் சென்று விட்டீர்! உம்மையிழந்து நான்படும் துயர் தாங்க முடியாதையா!

*ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!*

*கோண்டாவில் கிழக்கு, உமது ஆத்மா சாந்திடையப் பிரார்த்திக்கும்:*
*கோண்டாவில்.* (094) திருமதி இரா்ஜநாயகம் *(மனைவி)*

---

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜன.30

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் பரிசளிப்பு விழாவும், நிறுவுநர் விழாவும் நாளைமறு தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை திறந்த வெளியரங்கில் நடைபெறவுள்ளது.

அதிபர் ச.கைலாசநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதனும், சிறப்பு விருந்தினராக சங்கானைக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.செல்லையாவும், கௌரவ விருந்தினர்களாக பாடசாலை நலன்விரும்பிகளான சி.சண்முகராசாவும், மு.நடராசாவும் கலந்து கொள்வர்.

நிறுவுநர் நினைவுரையை வலிகாமம் கல்வி வலய கல்வி அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலாமகேந்திரன் நிகழ்த்தவுள்ளார்.

(க-8)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு,ஜன.30

வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களிடையேயான ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கபடிப் போட்டிகளின் இறுதி ஆட்டங்கள் இன்று புதன் கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு சுன்னாகம் மயிலணி மைதானத்தில் இடம்பெறவுள்ளன. (ஒ-86)

★ ★ ★

வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ள இறுதி ஆட்டத்தில் கலந்து கொள்ளும் அணிகள் வருமாறு:-

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க வி.க.எதிர் தெல்லிப்பழை யூனியன்ஸ் வி.க.

(ஒ-86)

★ ★ ★

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு யாழ் துரையப்பா விளையாட்டரங்கு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் சென்றோக்ஸ் வி.கவும் சென்நீக்கலஸ் வி.கவும் மோதுகின்றன.

(ஒ-86)

## திரைப்படம் குறித்த விரிவுரை

யாழ்ப்பாணம்,ஜன.30

சலன சித்திரம் அமைப்பின் திரைபடத் தொழில்நுட்பப் பயிற்சி தொடர்பான விரிவுரையொன்று எதிர்வரும் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 2மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கடந்த சில வாரங்களாக இவ் அமைப்பு நடத்திவந்த பயிற்சி வகுப்புகளில் பங்குபற்ற முடியாமற் போனவர்களுக்காகவே இந்த விரிவுரை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதால் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்துகொளளுமாறு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளனர்.

(ஒ-9)

## கணவனை இழந்த பெண்கள் சங்கம்

வலிகாமம் தெற்கு,ஜன.30

ஆனைக்கோட்டை சாவற்கட்டு கிராமத்தில் கணவனை இழந்த பெண்கள் சங்கம் ஒன்று அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

சாவற்கட்டு மகாத்மா பாலர் பாடசாலை மண்டபத்தில் இந்த அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றது.

(க-152)

## உளவளத் துணையாளர் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஜன.30

'அகவொளி' குடும்பவளததுணை நிலையம் நடத்தும் குடும்ப உளவளத்துணையாளர் பயிற்சி கடந்த சனிக்கிழமை மேற்படி நிலையத்தில் இயக்குநர் அருட்திரு.எஸ்.ஜே.இராஜநாயகத்தினால் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

தொடர்ந்து ஒரு வருடகாலத்திற்கு நடைபெறவுள்ள இப்பயிற்சி, வாரத்தின் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(க-8)

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையில் ஏழு வருடங்கள் நிறைவான சேவையாற்றி 30.01.2002ஆம் ஆண்டில் அறுபது வயதில் ஓய்வுபெறும் நல்லாசிரியர்

## உயர்திரு.கந்தையா காயாரோகணர்

**(இலங்கை ஆசிரியர் சேவை - வகுப்பு I) அவர்களை**

எமது பாடசாலைச் சமூகம் நன்றிகூறிப் பாராட்டுவதோடு, ஓய்வுபெறும் காலத்தில் சீரும் சிறப்பும் பெற்று வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
*யா/சுதுமலை*
*சிந்மய பாரதி வித்தியாலயம் மானிப்பாய்*

(093)

---

# கண்ணீர் அஞ்சலி



மறைந்த எமது கல்லூரியின் முன்னாள் அதிபர்

**அருட்தந்தை ஜோண் பிரான்ஸிஸ் O.M.I.**

அவர்களுக்கு எமது கண்ணீரைக் காணிக்கையாக்கி
அஞ்சலி செலுத்துகின்றோம்.

ஆசிரியர் சங்கம்,
*யா/புனித பத்திரிசிரியார்" கல்லூரி, யாழ்ப்பாணம்.*

(086)

---

# கண்ணீர் அஞ்சலி

எமது யா/புனித பத்திரிசியார் கல்லூரியின் முன்னாள் அதிபர்

## அமரர் அருட்தந்தை யோண் பிரான்சிஸ் அடிகளாருக்கு

**எமது கல்லூரிக் குடும்பத்தின் பெயரால் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம். இவரது பிரிவால் துயருறும் உற்றார், உறவினர், அமலமரித் தியாகிகள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

**இன்று (30.01.2002) புதன்கிழமை மு.ப.9.00 - பி.ப.3.00 மணிவரை எமது கல்லூரி சிற்றாலயத்தில் அன்னாரின் பூதவுடல் பெற்றோர், பழைய மாணவர், பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும்.**

யா/புனித பத்திரிசியார் கல்லூரி
குடும்பம்.

(095)

---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பாலசுப்பிரமணியம் தங்கம்மா

இராச வீதி, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசுப்பிரமணியம் தங்கம்மா 25.01.2002 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் பாலசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தம்பு - தங்கமுத்து தம்பதியினரின் அன்பு மகளும் ஜெயலட்சுமி (மன்னார்), விஜயலட்சுமி, தனலட்சுமி (கிளை முகாமையாளர், ப.நோ.கூ.ச., நீர்வேலி), கிருஷ்ணா, இராசலட்சுமி (சுட்டெழுத்தாளர், ஆதார வைத்தியசாலை, மன்னார்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் துரைசிங்கம் (ஆதார வைத்தியசாலை, மன்னார்), சித்திரசேனன் (கிளை முகாமையாளர், ப.நோ.கூ.ச., நீர்வேலி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்றவர்களான செல்லமுத்து, அன்னம்மா மற்றும் இரத்தினம், பாக்கியம், இராசதுர்ை, நடராசா (வவுனியா), பூமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2002) புதன்கிழமை காலை 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாசுவன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

*இராச வீதி,* தகவல்: பா.கிருஷ்ணா (அப்பன் - மகன)
*நீர்வேலி மேற்கு.* (085) வீ.சித்திரசேனன் (மருமகன் MPCS)

## இளையதம்பி கந்தையா

இணுவில் தெற்கு, பாலாவோடையைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி கந்தையா அவர்கள் நேற்று (29.01.2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவரும் கனகராசா (அதிபர், யா/வயாவிளான் ம.வி.), விஜயதேவன் (ஆசிரியர், யா/இடைக்காடு ம.வி.) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் வசந்தினி, சுதாகரி ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிராமி (யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி), மதியுகன், துவாரகன் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2002) புதன்கிழமை கோப்பாய் வடக்கு வராம்பற்றையில் நடைபெற்று, பூதவுடல் கோப்பாய் இந்து மயானத்தில் ஒரு மணிக்கு தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோப்பாய் வடக்கு.* (096) தகவல்: க.கனகராசா (மகன்)

# கண்ணீர் அஞ்சலி

கைதடி அரசினர் ஆயுர்வேத வைத்தியசாலையில்
தாதி உத்தியோகத்தராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற

## திருமதி சண்முகராசா இராசரத்தினம்

(தம்பிராசா மிசி)

அவர்கள் 27.01.2002இல் இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்துக்கு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வைத்திய பொறுப்பதிகாரி,
வைத்திய உத்தியோகத்தர்கள்,
உத்தியோகத்தர்கள்.

அரசினர்
ஆயுர்வேத வைத்தியசாலை,
கைதடி. (106)

# கண்ணீர்க் காணிக்கை

இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய பிரதிப் பொதுமுகாமையாளர் யாழ்.அலுவலகத்தில் மின்சாரப் பொறியியலாளராகக் கடமையாற்றிய

## C.செந்தில்நாதன்

அவர்களின் திடீர் மறைவையிட்டு மிகுந்த அதிர்ச்சியுடன், துயரில் மூழ்கியிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். ஆத்மா சாந்தி அடைவதாக!

ESS JEY ELECTRICALS,
9(2), Stanley Road, Jaffna.

(097)

# கண்ணீர் அஞ்சலி

*C.செந்தில்நாதன்*

(மின் பொறியியலாளர்)

29.01.2002இல் திடீர் மரணமடைந்த
எமது சங்க அங்கத்தவரும் மின் பொறியியலாளருமாகிய

## C.செந்தில்நாதன்

அவர்களின் மறைவையொட்டி துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரி மற்றும்
விளையாட்டுச் சங்கம்,
இலங்கை மின்சார சபை, வடமாகாணம்.

(102)

# கண்ணீர் அஞ்சலி

அருட்தந்தை

## ஜோண் பிரான்சிஸ்

(O.M.I.)



ஒளி ஊட்டி பாஷையூர் பங்கின் வழிகாட்டி
பிணி போக்கி, ஞானத் தந்தைக்குப் பொருள்காட்டி
பணி வாழ்வின் பாதையில் உனை மெழுகாக்கி
ஒளி காட்டி மறைந்தனையோ இறைமுகம் நோக்கி
விழி சிந்தி வேண்டுகிறோம் மகிழ்ந்திடுவீர் வான்வீட்டில்.

*பங்குத் தந்தையும்,*
*பங்கு மக்களும்.*

பாஷையூர். (100)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் செல்லப்பா செந்தில்நாதன்

மின் பொறியியலாளர், பிரதி பொதுமுகாமையாளர் அலுவலகம்
(வடக்கு), இலங்கை மின்சார சபை

நேரம் தவறாது கடமைக்கு வருபவரே!
காலந் தவறாமல் கடமையைச் செய்பவரே!
புன்முறுவல் ஒன்றுடன் மறுமொழி தருபவரே!
கடமையில் இருக்கும் நேரத்தில்
காலன் உனைப் பறித்தது ஏனோ?

அன்னார் 29.01.2002 செவ்வாய்க்கிழமை இயற்கை மரணம் எய்தியதையிட்டு துயருறும் அவரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதி பொதுமுகாமையாளரும், ஊழியர்களும்.

*பிரதி பொதுமுகாமையாளர் அலுவலகம் (வடக்கு),*
*இலங்கை மின்சார சபை,*
*536/1, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.* (C/20538)

# துயர் பகிர்கின்றோம்

சுன்னாகம் இலங்கை மின்சாரசபை மத்திய மின் நிலையத்தில்
மின் பொறியியலாளராகக் கடமையாற்றியவரும்,
தற்போது பிரதி பொதுமுகாமையாளர் வடக்கு அலுவலகத்தில்
கடமையாற்றிக்கொண்டிருந்தவருமான

## செல்லப்பா செந்தில்நாதன்

அவர்களின் திடீர் மறைவினால் நாம் மிகுந்த கவலை அடைகின்றோம். அவரது பிரிவால் துயரில் மூழ்கியிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து துயரில் பங்குகொள்வதோடு, ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*இலங்கை மின்சார சபை,*
*மத்திய மின் நிலையம்,*
*சுன்னாகம்.* (104)

மின் பொறியியலாளர்,
அலுவலர்கள், ஊழியர்கள்.

# சாவகச்சேரி இந்து மாணவர் விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.30

சாவகச்சேரி இந்துக் கல்லூரியை மீண்டும் சொந்த இடத்தில் இயங்கவைக்கும் நோக்கத்துடன் மாணவர்களின் பெயர் விவரங்கள் பதிவு செய்யப்படவுள்ளன.

நாளை மறுதினம் முதலாம் திகதி தொடக்கம் எதிர்வரும் 8ஆம் திகதி வரை வேலைநாள்களில் தினமும் காலை 9மணி தொடக்கம் பிற்பகல் 2மணிவரை சாவகச்சேரியில் உள்ள கல்லூரி அலுவலகத்தில் பதிவுகள் மேற்கொள்ளப்படும் என அதிபர் இ.கைலைநாதன் அறிவித்துள்ளார்.

சாவகச்சேரியின் பல்வேறு பகுதிகளிலும் சிதறிக்கிடக்கும் கல்லூரிக்கான தளபாடங்களை இந்தக் காலப் பகுதிக்குள் கல்லூரியில் ஒப்படைக்க கல்லூரிச் சமூகத்தினர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

(ஐ- 7)

# கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜன.30

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்டுவரும் கருத்தரங்குத் தொடரில் இன்று புதன்கிழமை காலை 9மணிக்கு காரைநகர் கலாநிதி தியாகராஜா மத்திய மகாவித்தியாலயத்தில் "முரண்பாடுகளைத் தீர்த்தல்" என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

(ஐ-6)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஜன.30

யாழ்.விஞ்ஞான சங்க சமூக விஞ்ஞானப் பிரிவினரின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் கருத்தரங்குத் தொடரில் எட்டாவது கருத்தரங்கு இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் "சமூக பொருளாதார பின்புலத்தில் இலங்கை அரசியல் யாப்புகள் பற்றிய விமர்சன நோக்கு" என்ற தலைப்பில் அரசியல் விஞ்ஞான துறை விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கம் கருத்துரையாற்றுவார்.

(3-6)

ENGLISH
SPOKEN
AND
GRAMMAR
By: BRITTO
புதிய பிரிவு
ஆரம்பம்: 02-02-2002
(சனிக்கிழமை)
நேரம்: மாலை 5.00
(பழைய நேரம்)
இடம்: கொக்குவில்
ஞானபண்டிதர் பாடசாலைக்கு
அருகில்
(C/20531)

ராஜா யாழ்ப்பாணம்
கமலஹாசன், சிம்ரன்,
ஸ்நேகா, அப்பாஸ்
பம்மல் K சம்பந்தம்
தினசரி: 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2, 5 (பு.நே.)
(C/20092)

நாகம்ஸ் சுன்னாகம்
இன்று முதல் குதூகல ஆரம்பம்
விஜய், பூமிகா, மோனல், விவேக்
மற்றும் பலர் நடித்த
பத்ரி
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 3.00 (பு.நே.)
(093)

நிரஞ்சனாஸ்
சங்கானை
சரத்குமார், மீனா
மற்றும் பலர் நடித்த
ரிஷி
தினசரி: 11.00, 2.30, 5.30 (பு.நே.)
(C-20408)

# மரண அறிவித்தல்கள்

## கார்த்திகேசு தம்பிராசா

சுன்னாகம் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு தம்பிராசா 23.01.2002 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னமுத்துவின் அன்புக் கணவரும் மனோன்மணி, கந்தரலிங்கம் (பிரான்ஸ்), ஆனந்தலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆனந்தகுமாரதாஸ் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்), சத்தியாதேவிஅம்மையார் (பிரான்ஸ்), சாந்தரூபி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெயானி (FCIMA - கொழும்பு), ஜெயரூபன் (உயர்தர மாணவன், கொக்குவில் இந்துக் கல்லூரி), சித்பவி (மாணவி, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), சதீசன் (பிரான்ஸ்), பொற்செல்வி (பிரான்ஸ்), அஜந்தன் (பிரான்ஸ்), அனுசா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2002) புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொத்தியாலடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ.மனோன்மணி (மகள்)
செ.ஆனந்தகுமாரதாஸ் (மருமகன்)

*இலங்கை வங்கி ஒழுங்கை,*
*சுன்னாகம் தெற்கு.*

## கனகர் கந்தையா

*(தவில் வித்துவான்)*

மானிப்பாய், உச்சியோடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகர் கந்தையா 21.01.2002 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகர் - நாகி தம்பதிகளின் புதல்வனும் நாகம்மாவின் அன்புக் கணவரும் சோதிநாதன் (ஜேர்மனி), பிறேமா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயந்தி (ஜேர்மனி), பாஸ்கரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் சீவரத்தினம், பூமணி (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரனும் தனுஜன், பிறிசித்றா, ஜெனா, ஜெறோன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2002) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நாகம்மா
(மனைவி)

*மானிப்பாய் வடக்கு,*
*மானிப்பாய்.* (107)

## நடராசா சிவசுப்பிரமணியம்

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சிவசுப்பிரமணியம் 27.01.2002 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் நடராசா - தெய்வானைப்பிள்ளையின் அன்பு மகனும் செல்லத்துரை - நாகம்மாவின் அன்பு மருமகனும் ஜெயராணி அவர்களின் அன்புக் கணவரும் சியாமளா, லசிதரன், குகதர்ஷினி, பிரதீபன், ஜினோதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற மகேஸ்வரி முத்துராசா, காலஞ்சென்ற பூமணி, சரஸ்வதி வடிவேலு, ருக்குமணி, தாரணதேவி, காலஞ்சென்ற மகாலட்சுமி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம், கருணைநாயகி, சீவரெத்தினம், நடராசா பாக்கியவதி, சேனாதிராசா, துரைராசா, கணேசலிங்கம், சிவநாதன், கலாவாணி, சுசிலாதேவி, லோகேஸ்வரி, ஜெகதீஸ்வரி, குகதாஸ் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.01.2002) வியாழக்கிழமை மதியம் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி வடக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
பிரதீபன் (பிரபா)
(மகன்)

*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.* (110)

## சட்டத்தரணி சின்னையா சிதம்பரநாதன்

கோண்டாவில், நெட்டிலிப்பாய் வாசியான சட்டத்தரணி சின்னையா சிதம்பரநாதன் நேற்று (29.01.2002) கொழும்பில் காலமானார்.

அன்னார் சறோஜினிதேவியின் அன்புக் கணவரும் சிவராஜ் (லண்டன்), ஸ்ரீஸ்கந்தராஜ் (லண்டன்), வசந்தினி, சுதர்சினி, சுபாஷினி, பிரியதர்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
வசந்தினி ஞானகணேசன்
225/480 1/3,Q Block,
பாரதி மாவத்தை, கொழும்பு - 10

(C/20539)

## செல்லப்பா செந்தில்நாதன்

*(மின் பொறியியலாளர், தலைமை அலுவலகம், யாழ்ப்பாணம்)*

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் யாழ்.நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா செந்தில்நாதன் நேற்று (29.01.2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கலாநிதியின் அன்புக் கணவரும் பொன்னாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற விஸ்வநாதன் செல்லப்பா (ஆசிரியர்) அவர்களின் அன்பு மகனும் காலஞ்சென்ற வைத்திய கலாநிதி குகநாததாசன் மற்றும் தில்லைநாயகி தம்பதிகளின் அன்பு மருமகனும் மயூரதாசனின் (யாழ்.பல்கலைக்கழக மின்பொறியியல் டிப்ளோமா மாணவன்) அன்புத் தந்தையும் தயாநிதி (லண்டன்), சாந்திநிதி (தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), ஜெயநிதி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற க.இராசேந்திரம் (ஓய்வுபெற்ற உடற்பயிற்சி ஆசிரியர்) மற்றும் வித்துவான் மகேஸ்வரி (செங்குந்த இந்துக் கல்லூரி) ஆகியோரின் ஒன்றுவிட்ட மருமகனும் பதுமநிதி (லண்டன்), செந்தில்நிதி (விரிவுரையாளர், தென்கிழக்குப் பல்கலைக் கழகம்) ஆகியோரின் மைத்துனரும் லீலா (லண்டன்), பாலசுப்பிரமணியம் (லண்டன்), வைத்திய கலாநிதி தனஞ்செந்தி (கொழும்பு தேசிய வைத்தியசாலை) ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரரும் காலஞ்சென்ற ரகுராமன், கைலைநாதன், சபாநாதன் (ஆசிரியர்), பஞ்சநாதன் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2002) புதன்கிழமை இல.59, இராமநாதன் வீதி, நாயன்மார்கட்டிலுள்ள இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் ஒரு மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் சக உத்தியோகத்தர்கள் ஆகியோர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.கலாநிதி
(மனைவி)

59, இராமநாதன் வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம். (109)



விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை நோர்வே சமாதானக் குழுவினர் நேற்றுமுன்தினம் லண்டனில் உள்ள இல்லத்தில் சந்தித்து பேச்சு நடத்தியபோது எடுக்கப்பட்ட படம். (படம்:தமிழ் கார்டியன்)

# கண்டி நீதிமன்றில் நேற்று அடையாள அணிவகுப்பு

கடந்த தேர்தல் காலத்தில் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்காவின் ஆதரவாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகச் சம்பவம் தொடர்பாக கண்டி நீதிமன்றத்தில் நேற்று அடையாள அணிவகுப்பு இடம்பெற்றது.

ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த இரு அதிகாரிகள் உட்பட நால்வர் அடையாளம் காட்டப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த ஐவர் உட்பட 9பேரை மத்துறட்ட பொலீஸார் கைது செய்து கண்டி நீதிமன்றத்தில் ஆஜர் செய்திருந்தனர்.

அடையாள அணிவகுப்பு நீதிவான் சி.வி.ராஜபக்ஷ முன்னிலையில் நேற்று நடத்தசமயமே நால்வர் அடையாளம் காணப்பட்டனர்.

இதேவேளை -

ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவின் இயக்குநரான நிமால் கருணாரட்னவை உடன் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு கண்டி நீதிமன்றம் நேற்றுப் பிடியாணை பிறப்பித்துள்ளது.

பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஒருவரை கொலை செய்யப் போவதாகப் பயமுறுத்தியமை -

அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கவை கொலை செய்யத் திட்டமிட்டமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரிலேயே இந்தப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் -

தேர்தல் வன்செயல்கள் தொடர்பாக போகம்பரைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவர்களை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று முன்தினம் அங்கு சென்று பார்வையிட்டார் என்று செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது. (ஐ-3-6-ரி)

# மட்டு. கல்வியியல் கல்லூரிக்கு இங்கு 30 மாணவர்கள் தெரிவு

யாழ்ப்பாணம்,ஜன.30

மட்டக்களப்பு தேசிய கல்வியியல் கல்லூரியின் புதிய கல்வி ஆண்டு கற்கைநெறிகளுக்கு யாழ். மாவட்டத்தில் இருந்து 30 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

ஆரம்பநெறி, முதல்மொழி, சமூகக்கல்வி, தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ள மாணவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

**ஆரம்பநெறி**

எஸ்.திருச்செல்வம் (கொடிகாமம்), ஆர்.சிவதர்சினி (சுன்னாகம்), ஏ.சுமதி (காரைநகர்), கே.இராஜேஸ்வரன் (கொடிகாமம்), பி.மதிவண்ணன் (புன்னாலைக்கட்டுவன்), கே.சுமித்திரா (புத்தூர்), ஜீ.ரேவதி (சாவகச்சேரி), கே.சுபாஜினி (நல்லூர்), எஸ்.ராஜசுலோசனா (கைதடி), கே.வதனா (கொக்குவில்)

எம்.நளினரஞ்சினி (சுழிபுரம்), பி.நேசமலர் (காரைநகர்), ரி.கலையரசி (சுழிபுரம்), கே.சுஜிதா (நீர்வேலி), ரி.ரஞ்சிதா (வல்வெட்டித்துறை), சாமினி (உடுப்பிட்டி), ரி.சங்கீதா (கோப்பாய்), ரி.முத்துராசன் (பண்ணாகம்).

**முதல்மொழி**

வி.சற்குணராசா (காரைநகர்), இ.என்.வில்சன் (சுண்டிக்குளி), ரி.நிமலன் (புலோலி), கே.கைபோபா (ஊர்காவற்றுறை), எல்.நிசாந்தன் (இளவாலை வடக்கு), எஸ்.யோகசெல்வம் (உடுப்பிட்டி).

**சமூகக்கல்வி**

எஸ்.காயத்திரி (புலோலி மத்தி), என்.நந்தீஸ்வரன் (சுழிபுரம் மத்தி), கே.சுகன்யா (சிறுப்பிட்டி), கே.சயந்தன் (அரியாலை), டபிள்யூ.வி.வி.தினேஸ் (உடுவில்).

**தொழில்நுட்பம்**

ஆர்.செல்வக்குமார்

மேற்படி மாணவர்கள் தமக்குரிய அனுமதிக் கடிதங்களை யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7-6)

## நெப்போலியன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிவுசெய்தது.

முதலாவது சாட்சியான ரெலோ அமைப்பின் பிரமுகர் கனகரத்தினம் விந்தன் நேற்று சாட்சியம் அளித்தார்.

அவரை இரண்டாம் எதிரியான மதனராஜன் குறுக்கு விசாரணை செய்தார். மதனராஜன் சார்பில் சட்டத்தரணிகள் எவரும் ஆஜராகாததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய நீதிமன்றம் அவரை அனுமதித்திருந்தது.

விசாரணைகளை நாளை வியாழக்கிழமைக்கு நீதிவான் ஒத்திவைத்தார். (ஐ-3-10-8)

**WANTED**

An experienced Manager for a hardware establishment in Jaffna. Communication skills and PR essential. Fluency in all three languages are added qualifications. Salary negotiable but not less than Rs.10,000/=.

Please reply **ADVT No.:- 1439.**
**C/O "UTHAYAN"**
**361, Kasthuriar Road,**
**Jaffna.**

(C/20537)

## விளக்குவைத்த.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னைகளை முடித்துக்கொண்டு வடக்கே தொடர்ந்து பயணம் செய்ய வசதி செய்யப்படவுள்ளது.

வவுனியாவுக்கு வடக்கே படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற பிரதேசத்தின் வடமுனையாக விளங்கும் விளக்குவைத்தகுளம் பகுதியில் தற்போது படையினரின் பிரதான முகாம் அமைந்திருக்கிறது.

ஏ - 9 கண்டி வீதியை அண்டி அமைந்துள்ள அந்த முகாம் பகுதி ஊடாக முகாமைத் தாண்டி போக்குவரத்துச் செய்ய அனுமதிக்கப்படமாட்டாது என்றும் -

இதற்கு மாற்று ஏற்பாடாக அந்த முகாமுக்கு மேற்காக - முகாமைச் சுற்றி சுமார் ஒரு மைல் தொலைவு நீளமான தற்காலிக பாதை அமைக்கப்பட்டு அந்தப் பாதையூடாகவே போக்குவரத்து இடம்பெறும் என்றும -

தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவில் இருந்து வடக்கே செல்லும் வாகனங்கள் முதலில் கண்டி வீதி வழியாக விளக்குவைத்தகுளம் பகுதியை அடைந்து அங்கு சோதனைகளை முடித்துக்கொண்டு அங்கிருந்து புதிய கிரவல் பாதை வழியாகச் சென்று விளக்குவைத்தகுளம் படைமுகாமில் இருந்து வடக்கே ஒரு மைல் தொலைவில் மீண்டும் கண்டி வீதியில் இணைந்துகொள்ளும்.

இந்த ஏற்பாட்டுக்கு வசதியாக தற்போது கிரவல் பாதை ஒன்றை அமைக்கும் வேலைகள் விளக்குவைத்தகுளம் பகுதியில் நடைபெற்று வருகின்றன. இந்த வேலைகள் பூர்த்தியானதும் எதிர்வரும் பெப்ரவரி 15 ஆம் திகதி பெரும்பாலும் கண்டி வீதி திறக்கப்பட்டு போக்குவரத்துகள் ஆரம்பமாகும் என்று விடயமறிந்த வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

கண்டி வீதி திறக்கப்பட்ட பின்னர் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கான தற்போதைய பிரமணாளங்குளம் வீதி மூடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

குடாநாட்டுக்கான தரைவழிப் பாதையை ஆனையிறவு ஊடாகத் திறப்பது தொடர்பாக ஆராயப்பட்டு வருகின்றபோதும் அது தொடர்பாக இன்னமும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முதற்கட்டமாக இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்துக்கான தரைப் பாதையே கண்டி வீதி வழியாகத் திறக்கப்பட இருப்பதாகவும் குடாநாட்டுக்கான தரைப்பாதையைத் திறக்க அடுத்த கட்டமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

**O/L DAY CLASS**

வகுப்புகள் ஆரம்பம்:
01-02-2002
வெள்ளி காலை 9.00 மணி

குடாநாட்டின் முன்னணி ஆசிரியர்கள்

தமிழ் - தர்மா
கணிதம் - ஜெனதன்
விஞ்ஞானம் - GRAP குமரன்
சமூகக்கல்வி - பார்த்தீபன்
விவசாயம் - திருக்குமரன்
வர்த்தகம் - கமல்ராஜ்
சமயம் - அனுசன்
ஆங்கிலம் - தர்மலிங்கம்
புவியியல் / அபிவிருத்தி - பார்த்தீபன்

தரமான ஆசிரியர்களை தெரிவு செய்வதன் மூலம் உங்கள் உயர்தரக் கல்விக்கு வித்திடுங்கள்

குமரன்
கல்வி நிலையம், கந்தரோடை (97267)

குமரன் கல்வி நிலையம்
கந்தரோடை

2004 A/L கலைப்பிரிவு
மாணவர்களுக்கான புதிய பிரிவு
ஆரம்பம்: 01.02.2002
பிற்பகல் 3.30 மணி
யாழ்.முன்னணி ஆசிரியர்கள்

தமிழ் - திரு.குழந்தை
அளவையியல் - S.S.மனோகரன்
இந்துநாகரிகம் / இந்து சமயம் - S.கரேஸ்
நாடகமும் அரங்கியலும் - I.சத்தியா
(97266)

# இடிந்து வீழ்ந்த சுவரினுள் சிக்குண்டு இளைஞன் பலி!

யாழ்ப்பாணம்,ஜன.30

இராணுவ நடவடிக்கையின்போது சேதமடைந்த வீடு ஒன்றின் சுவரில் இருந்து கற்களை அப்புறப்படுத்த முயன்ற இளைஞர் சுவர் சரிந்து வீழ்ந்ததில் அதனுள் சிக்கிப் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை மானிப்பாய்ப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. உயிரிழந்தவர் அதே இடத்தைச் சேர்ந்த ஆர்.ஜெகதீஸ்வரன் (வயது 17).

இடிபாடுகளுக்கிடையில் இருந்து உயிருடன் மீட்கப்பட்ட இவர் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரும் வழியில் உயிரிழந்தார் எனக் கூறப்பட்டது.

இவரது சடலம் மரணவிசாரணையின் பொருட்டு யாழ்.ஆஸ்பத்திரிப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி இளைஞர் சில வருடங்களுக்கு முன் மிதிவெடியில் அகப்பட்டு முழங்காலுக்குக் கீழ் ஒரு காலை இழந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7-15)

## 15 எம்.பிக்கள் அரசுக்கு ஆதரவு

பொ.ஐ.முன்னணியைச் சேர்ந்த 15 எம்.பிக்கள் அரசுக்கு ஆதரவு அளிக்க முன்வந்துள்ளனர். நாடாளுமன்றத்தில் கட்சி மாறாமலேயே அரசின் நல்ல காரியங்களுக்கு இவர்கள் ஆதரவு அளிப்பர்.

கம்பஹா மாவட்ட பொ.ஐ.மு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

பொ.ஐ.முன்னணியில் இருந்து முன்னர் அரச தரப்புக்கு மாறிய ஓர் அமைச்சர் எம்பிக்களின் ஆதரவைப் பெறுவது குறித்து பேச்சு நடத்தியிருக்கிறார். (ஐ)

## புல்மோட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து தப்பிவந்த மீனவர்கள் இது தொடர்பாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனிடம் முறைப்பாடு செய்தனர். இதனை அடுத்து அவர் உடனடியாக கடற்படையினருடன் தொடர்பு கொண்டு முறைப்பாடு செய்ததாகவும் இது தொடர்பாக கடற்படை அதிகாரிகள் விசாரணை செய்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-6-ரி)

## செயலக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடைக்கும் வரை - தொடர்ந்து நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்தப் போராட்டத்தில் மீனவர் சங்கங்களின் உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் பங்குபற்றுவர்.

இன்று காலை 7.30 மணியளவில குருநகர் புனித யாகப்பர் ஆலயம் முன்பாக ஒன்றுகூடும் மீனவர்கள் அங்கிருந்து பதாகைகளைச சுமந்தவாறு ஊர்வலமாக யாழ்செயலகத்தை வந்தடைவர். பின்னர் காலை 8 மணியளவில் அங்கு மறியல் போராட்டம் ஆரம்பமாகும்.

இன்று காலை ஆரம்பிக்கும் மறியல் போராட்டம் இரவு, பகலாகத் தொடர்ந்து நடைபெறும் என்றும் -

மீனவர்களின் கோரிக்கை குறித்து உரிய பதிலை அரசு தரும்வரை மீனவர்கள் எவரும் கடலுக்குச் செல்ல மாட்டார்கள் என்றும் -

ஏற்பாட்டாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

யாழ்மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம், மீன்பிடியியல் டிப்ளோமா பட்டதாரிகள் சங்கம் உட்பட குடாநாட்டில் உள்ள சுமார் 70 பொதுஅமைப்புகள் மீனவர்களின் மறியல் போராட்டத்துக்குத் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளன.(ஐ-7-10-51)

## ஆயிரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதிகளும் இடம்பெறலாம் என்றும் -

சமாதானத்துக்கான நல்லெண்ண முயற்சியாக அண்மையில் விடுதலைப் புலிகள் விடுதலை செய்த 10 சிங்கள யுத்தக் கைதிகளின் விடுதலைக்குப் பதிலாக அரசும் தமிழ்க் கைதிகளை விடுதலை செய்யலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-3-6)

## தேர்தலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிய தேசியக் கட்சி அரசாங்கம் தேர்தலை ஒத்திவைக்க முடிவு செய்துள்ளது.

தமது தனித்தாயகத்தில் தேர்தல் நடத்தப்படவேண்டுமா இல்லையா என்பதைத் தீமானிக்க வேண்டியது தாங்களே என்ற விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டையே இது எடுத்து காட்டுகிறது.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6-ரி)

## நோர்வே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

நிரந்தர போர்நிறுத்த்தை உள்ளடக்கிய புரிந்துணர்வு உடன்படிக்கையில் இடம்பெறும் விடயங்கள் குறித்து தம்முடன் நோர்வேக் குழு ஆராய்ந்தது என்றும் பாலசிங்கம் கூறினார்.

போர்நிறுத்தத்தை அனுஷ்டிப்பது குறித்தும் போர்நிறுத்தக் காலத்தில் இருதரப்பும் நடந்துகொள்ளும் முறை பற்றியும் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்ள வேண்டியது அவசியம் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

புரிந்துணர்வு உடன்படிக்கை எப்படி அமையவேண்டும் என்பது பற்றியும் விரிவாக ஆலோசிக்கப்பட்டது. புலிகள் தரப்புக் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் அன்ரன் பாலசிங்கம் நோர்வேக் குழுவினிடம் தெளிவாகத் தெரிவித்துவிட்டார்.

இலங்கை அரசுக்கு அந்தக் கருத்துக்களும், ஆலோசனைகளும் தெரிவிக்கப்படும்.

இலங்கை அரசின் கருத்தை அறிந்ததும் நோர்வேக்குழு புரிந்துணர்வு உடன்படிக்கையைத் தயாரித்து இரு தரப்பினிடமும் கையெழுத்துக்காகச சமர்ப்பிக்கும்.

இலங்கை அரசுடன் நோர்வேயின் இலங்கைத் தூதுவர் வெஸ் பேர்க் நெருங்கிய தொடர்புகளை வைத்திருப்பார். இலங்கை அரசுத் தகவல்களை அவர் நோர்வேக் குழுவுக்குத் தெரிவிப்பார்.

அடுத்த வாரம் கொழும்பு வரும் நோர்வேக் குழு அரசுத் தரப்புடன் கலந்துரையாடிய பின்னர் உடன்பாடு குறித்து இறுதிமுடிவை எடுக்கும் என்று செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது. (ஐ-3-6-173-ரி)

புதிய வெளியீடு
பிரகாஷ்ராஜ் நடிப்பில்
முறமாறி
பிரதிகள் உடன் பெறலாம்.
சிந்து வீடியோ
உரும்பிராய்ச் சந்தி,
உரும்பிராய்.
(C/20542)

யாழ். பல்கலைக்கழக நாடகமும் அரங்கியலும் மாணவர்கள் வழங்கும்
வேதாளம்
(நாடகம்)
31 - 01 - 2002
பிரவேசம் மண்டப வாயில்
அன்பளிப்பு: 30/-, 50/-
கைலாசபதி கலையரங்கு 3.00 (பு.நே.)
(089)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.01.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.